# ஜகன் மோகினி

14

மன்மத ஞூ தை மீ 1—2—56 அணா நான்கு

துப்பறியும் வீர சிங்கம்

**ராஜாராம் நாயுடு**

(தொடர்ச்சி)

33-வது ஆண்டு இதழ் 2.


14
2-56



N56.33.2
183199

ஆசிரியை: வை. மு. கோதைநாயகி அம்மாள்

# க்ஷேம லாபங்கள்




வாசக மகனீயர்களுக்கு வணக்கம். உபயகுசலம்.

ஸ்ரீ கீதாசாரியன் திருவருளால் நம்மெல்லோருடைய இல்லங்களிலும் அவனது கருணையுடன் கூடிய பால் பொங்கியது. எல்லோருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை மகிழ்சியுடன் தெரிவித்துக் கொளகிறேன்.

33-வது ஆண்டின் மோகினி இதழை அலங்கரிக்கும் விஷயங்களில்;—முக்யமாய் குறிப்பாக, ஸ்ரீராஜமய்யரின் சரித்திரம், அறிஞர்களின் அமுதவாக்கு, விகடவெடிகள், குடும்ப வைத்யம் முதலிய புதிய அம்சங்களைப் பாராட்டி பல சகோதர சகோதரிகள் உத்ஸாகத்துடன் கடிதமெழுதியிருக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் வை. மு. ஸ்ரீ யின் சரித்திரக் கதை இந்த புதிய இதழிலாவது வெளிவரும் என்று எதிர்பார்த்தோம். ஏமாற்றமாக இருக்கிறது. என்று எழுதியிருக்கிறார்கள். வை. மு. ஸ்ரீக்கு சற்றும் ஓய்வில்லாத வேலை அதிகமாயிருப்பது காரணமாக இவ்விதழில் வெளியிட முடியவில்லை, கூடிய சீக்கிரத்தில் வெளியிட்டு அன்பர்களின் ஆவலைப் பூர்த்திசெய்கிறேன். நேயர்கள் தபால் வெளியிட அவகாசமின்மையால் அடுத்த இதழில் வெளிவரும்.

மோகினியின் சந்தாதாரர்கள் தங்கள் தங்கள் உறவினர்களையும் சினேகிதர்களையும் சந்தாதாரராகச் சேர்த்துக்கொடுத்து உதவி புரியும்படியாக மிகமிக வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

**5 புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு ஒரு வருடத்திய மோகினி இனாமாகக் கொடுக்கப்படும்.**

**3 பேர் சேர்த்துக்கொடுப்பவர்களுக்கு சந்திரகலா மாலையும், கருணை உள்ளமும் கொடுக்கப்படும்.**

மோகினியின் அன்பர்கள் இவ்விஷயத்தைக் கவனிக்க வேண்டும்படி கோருகிறேன்.

ஜனவரி இதழில் பிரசுரமான அறிவுப்போட்டிக்கு அனேக பேர் விடை அனுப்பி இருக்கிறார்கள் எனினும் இரண்டு தப்பும் மூன்று தப்பும் உள்ள விடைகளே அதிகம் வந்திருக்கின்றன. சரியான விடையை 7 பேர்கள் எழுதியிருக்கிறார்கள். சரியான விடைகல்யாணத்தில் அதிமுக்யமான 5 விஷயங்களாவன.

1—கெட்டி மேளம்; 2—தாரை வார்தல்; 3—மாங்கல்யம்;
4—அக்னிவலம்; 5—சுபலக்னம்.

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்]


வருகிறது...
நாகபூஜையின் மகாத்மியத்தை
விளக்கும் நல்லதொரு
தமிழ் சித்திரம்...
நாக பஞ்சமி
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனி தயாரிப்பு....
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம் · வசனம்: உதயகுமார்
அஞ்சலிதேவி · கண்ணாம்பா · எஸ். வரலக்ஷ்மி ·
ருஷ்யேந்திரமணி · லக்ஷ்மிபிரபா ·
வி. நாகையா · தங்கவேலு ·
வரதன் · நடராஜன் ·
நடித்தது...



# ஜகன்மோகினி



ஜயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

பிப்ரவரி 1956. மலர் 33, இதழ் 2 மன்மத ஹு தை

## தக்ஷிணப் பிரதேசம்

வி. கே. பார்த்தஸாரதி அய்யங்கார்
அட்வகேட், திருவல்லிக்கேணி

'நண்ணுதார் முறுவலிப்ப நல்லூற்றுர் கரைந் தேங்க
என்ணுராத் துயர் விளைக்கும் இவையென்ன உலகியற்கை—?'

* * *. * *

ஈச்வர சக்திதை மறந்து, அஞ்ஞான காரணமாகவோ, விஞ்ஞான காரணமாகவோ, விபரீதஞ்ஞான காரணமாகவோ, முயற்சிகள் நடந்தேறுமாகில், இந்தியத் தாய்,—'ஐயோ! வேண்டாமே'—என்று அலருது, வேறென்ன சொல்லக்கூடும்?—

சுதந்திரம் பிறந்தவேளை, ஏழரை நாட்டான் பிடிக்க ஆரம்பித்த வேளையோ! 'ஏழரைநாட்டான் ஒழிந்தானேயா!'—, என்று சற்று பெருமூச்சுவிட்டு நிமிர்ந்து நடக்க நினைத்தபொழுதே,—'அஷ்டமத்தில் வந்து விட்டேன்'—, என்றது சனி பகவான் அசரீரிவாக்கு—. 'இரண்டரை வருஷகாலந்தானே—. தொலையட்டும்'--என்று ஆச்வாசப்படும் வேளையில்,—'அஷ்டமம் அகன்றதும் சனிமகாதசை யோகம் அடிக்கப்போகிறது நம் இந்தியாவிற்கு'—, என்று ஆசிகூறிக் குதூகலிக்கிறுர்களே மந்தன் தொண்டர்கள்!—'ஐயோ!—, வேண்டாமே'—.

மூன்று பத்தாண்டுகள் முன், காங்கிரஸார் கொடுத்த பாஷாவாரித் தேசப் பிரிவினையை இன்று நினைப்பூட்டி, கைகேயி தசரதனை வரங்கேட்டதுபோலப் பயமுறுத்துகிறுர் தமிழரசுக் கழகத் தலைவர், பிரதமர் நேருவை!—. ராஜ்யபுனரமைப்புக் காரணமாய்ப் புகைந்துகொண்டிருந்த பாஷா வெறித்தீ, பிரதேசப் பிரிவினைப் போராட்டப் பெருந்தீயாகக் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்துவிட்டது. பப்பாய்த்தீ, ஊரையே கொளுத்திச் சூறையாடிற்று—. அரசாங்க அறிக்கைப்படி, பப்பாய்க் கலவரங்களில், 71 உயிர்கள் மாண்டன--. இதில், 68 குண்டுவாய்ப்பட்டது; இரண்டு, கத்திக்கிரையானது; ஒன்று, கல்லடிபட்டுக் காலனடி சேர்ந்தது. 550 உயிர்கள், -படுகாயப்பட்டுப் பரிதவித்தன--; இவற்றுள், குண்[illegible] 250; கல்லடிபட்டது 300—. இது தவிர, [illegible] போலீஸ் உயிர்களும், மற்றும் நூறு பிராணன்களும, திராவக [illegible] சேஷ்டையாலும், கல்[illegible] காரணத்தாலும் அவதிக்குள்ளாயின. அமளியில் அடிப்பட்டும் ஆ[illegible] துறந்துபோனதுமான அசல்பட்டி

12199

யல் கணக்கு, அந்த யமதர்மனுக்கும், அவரவர் குடும்பத்தார்களுக்குந்தான் அறியவரும்—.

பம்பாய் நிலை இப்படியிருக்க,—பீர்மேடும், தேவிகுளமும், செங்கோட்டையிலோர் பகுதியும் திருவாங்கூருடன் சேர்க்கப்பட்டதாம்—. அவ்வளவுதான்!—தூக்கிப் பிடித்தார்கள் தமிழரசுத் தீப்பந்தத்தை—! திராவிட நாட்டாரது கொள்ளிக்கட்டைகளை!—தி-மு-க தொண்டர்களும், ஈ. வெ. ரா. அடியார்களும் ஆவேசங் கொண்டார்கள். நேரே நுழைந்தார்கள் பால்மணம்மாருப் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளிலும், ஆணும் பெண்ணும் கல்வி கற்கும் கல்லூரிகளிலும்! அவர்களை வெளியேற்றி—,தெருத்தெருவாய்த் தொண்டை வரளக் கூவிச் செல்ல இழுத்துச் சென்றனர்.—இந்த மேடுக்கும், அந்தக் குளத்துக்கும், நமது மாணவர்களுக்கும் என்ன சம்பந்தமையா?—இத்தமிழ்த் தொண்டர்களா நமது குழந்தைகளுக்கு மாதா மாதம் பள்ளிச்சம்பளமும், ஹாஸ்டல் சிலவும் கொடுக்கிருர்கள்?—அவரவர் அன்னை தந்தையர், அரைப் பட்டினி இடந்து, நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துச் சேமித்து, தத்தம் பிள்ளைகள் படித்துப் பிழைப்பாளிகளாக வேண்டுமேயென்ற பெரும்பீதியுடனும், ஆஸ்தையுடனும் சென்னைக்கு அனுப்பி வைக்க, அவர்கள் படிப்பையுங் கெடுத்து, மன ஒழுங்கையும் மாற்றுவதா தமிழரசு? 'ஐயோ' வேண்டாமே! சென்னை நிலை இது—.

பஞ்சாப் பிரதேசத்தில் பற்றியெரியும் தீயைப் பாருங்கள்—. லிபித் தீ!—பஞ்சாபி பாஷையை தேவநாகரி லிபியிலும், குருமுகி லிபியிலும் எழுதக்கூடும்.—பஞ்சாபில், பஞ்சாபி பாஷை நிலவும் பஞ்சாபியர் பிரதேசம், ஹிந்தி பாஷை நிலவும் ஹிந்து பிரதேசம், இரு பாஷைகளும் கலந்து உலவும் பிரதேசமென்ற பிரிவுகளுண்டு.—ஹிந்தி பாஷை, தேவநாகரி லிபியில்தான் எழுதப்படுவது—. இந்நிலையில், கடந்த ஸெப்டம்பர் மாத சுமாரில், சச்சார் மந்திரி சபையார், பஞ்சாபிப் பிரதேசத்தில் பஞ்சாபியும், ஹிந்திப் பிரதேசத்தில் ஹிந்தியும், ராஜாங்க அலுவலகங்களின் பாஷைகளாயிருத்தல் வேண்டுமெனத் தீர்மானித்தனர்.—. ஸெக்ரிடேரியட்டிலும், ஹைகோர்ட்டிலும் கையாளப்பட வேண்டிய பாஷையைப்பற்றித் தீர்மானிக்கவில்லை—. ஆனால், இப்பொழுதோ, ராஜ்யப் புனரமைப்புக் காங்கிரஸ் சப்-கமிட்டியார் செய்துள்ள தீர்மானப்படிக்கு, பஞ்சாப் மாகாணம் முழுதும், பஞ்சாபி பாஷையே ராஜாங்க அலுவல் பாஷையாகவும், ஹிந்தி பாஷை, தேசீய பாஷையாகவும் ஏற்கப்பட வேண்டுமாம். ஆகவே, ஸெக்ரிடேரியட்டிலும், ஹைகோர்ட்டிலுங் கூட, பஞ்சாபி பாஷையே ஆதிக்கம் பெற்றதாகிவிட்டது. இந்தப் பாஷையை, ஹிந்துக்கள், தேவநாகரி லிபியில்தான் எழுதுவோமென்கிருர்கள்—. குருமுகி லிபியில்தான் எழுதியாக வேண்டுமென்று கட்டாயப்படுத்திச் சர்ச்சைப்போர் கிளப்பியுள்ளனர் ஆகாலியர்—. வீண் வம்புதானே இது?—ஆகாலியர்க்குள்ள எழுத்துச் சுதந்திரம், ஹிந்துக்களுக்குமட்டும் இடையாதா?—. இதுவும், ஓர் சுதந்திரக் குடியரசு முறையேயோ?—.

கமிஷன் அறிக்கையையொட்டி மாகாணப் புனரமைப்பு மசோதா காங்கிரஸ் சப்-கமிட்டியாரிடையே தயாராகி வருகிறது. இதன்

இடையே, டில்லியில், மாகாணப் பிரதான மந்திரிகள் கூடிய சமீப காலத்தில், மேற்கு வங்காளப் பிரதமரும், பீஹார் பிரதமருமாகக் கூடி, மேற்கு வங்காளமும், பீஹாரும் பூர்வப்பிரதேசமாக ஒன்று சேர்ந்துவிட்டதாகக் கூறினர்—. இந்த வீரதீரத் தீர்மானத்தைக் கேட்டதுமே, பிரதமர் நேருவுக்கு, ஓர் சுமஉணர்ச்சி உதயமாகி, அக்கணமே அகிலத்தாருக்கு ஓர் அறிக்கையும் விடுத்துவிட்டார். 'மேற்கு வங்காளம் பீஹார் ஒற்றுமைத் தீர்மானம், பெருத்ததோர் தியாகச்செயலே!—இன்றைய இந்திய நிலைமை நேர்ப்படுத்தும் வழிகாட்டிகளே இவர்கள்!—இதுவரை நாம் செய்த அசட்டுத் தனங்கள் போதும்—. இனியாவது கண்விழித்து, பூர்வப் பிரதேசத் தார் காட்டிய வழி சென்று, இதர திக்குகளிலும் பிரதேசங்கள் ஏற்படுமாக!—' 'இதுவரை செய்துவந்த அசட்டுத்தனங்கள் போதும்'—என்றுரே பிரதமர்—. யார் அசட்டுத்தனம் செய்து வந்தார்கள்?—எதேது அசட்டுத்தனமானது?—யார் பதில் சொல் லக்கூடும் இதற்கெல்லாம்!—.

பூர்வப் பிரதேச ஸ்தாபனத்தின் எதிரொலி என்ன? கேரள மும், சென்னையும், கர்நாடகமும் சேர்த்து 'தக்ஷிணப்பிரதேச ஸ்தாபனம் ஆகவேண்டியதுதான்'—என்றதோர் அதிர்வெடி, டில்லியிலேயே அக்கணமே போடப்பட்டதாம்—. மைசூர், திரு வாங்கூர் பிரதான மந்திரிகள்,—'அதுவே சரி'—என்று, அங் கேயே சொல்லிவிட்டார்களாம்—. சென்னைக் காமராஜருக்கு மட் டும் நாவெழவில்லையாம். சென்னை திரும்பித் தன் சகாக்களுடன் கலந்தாலோசித்து முடிவுகூறுவதாகச் சொல்லி வந்துவிட்டா ராம்—. தமிழரசுக்கழகத் தலைவர் ஸ்ரீ ம. பொ. சி. தக்ஷிணப் பிரதேச எதிர்ப்புத் துவஜாரோகணம் செய்துவிட்டார். திரா விடர் கழகத்தாரும், தி. மு. க. தொண்டர்களும், ஈ. வே. ரா. அடியார்களும், திராவிடநாட்டு ஸ்தாபனக் கிளர்ச்சிப் போர் துவக்கிவிட்டனர்—. நிதி மந்திரி ஸ்ரீ சுப்ரமணியமோ, தக்ஷிணப் பிரதேச ஸ்தாபன அங்கீகாரத்தை ஆமோதிப்பதாக அறிக்கை விட்டுள்ளார். சென்னை இதர மந்திரிகளும் இதை ஆக்ஷேபிக்க வில்லை—. இந்நிலையில், காமராஜர் எதைச் சொல்வார், பாவம்?— 'ஐயோ—வேண்டாமே, என்றுதான் அழுகிருர்போலும்!— எதுவேண்டாம்?......

ஆந்திரர் அபிப்பிராயமென்ன?—'கர்நாடகம், கேரளத்துடன் சேர்ந்தால், ஆந்திரர், மகாராஷ்டிரருடன் கூடிக்குலவ வேண்டி யதுதான்—. தியாகய்யர் பாடலும், துக்காராமது பஜனையுங் கலந்திடுமாகில், இதைவிட ரம்யமான கலாசாரப்பெருக்கம் உளதோ'—என்று குதூகலித்துக் கொக்கரிக்கிருர் ஸ்ரீ—கோபால ரெட்டியார்—. ஆந்திரப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி தலைவரோ, 'தெலுங்காணவும் ஆந்திராவும் ஒன்றுசேர்ந்த விசாலாந்திரா ஸ்தா பிதமான பின்னர்தான், ஆந்திரர், மகாராஷ்டிரருடன் சேருவதா, கர்நாடகத்தில் கலப்பதா என்று யோசிக்கக்கூடும்'—என்று முடுக்காய்ப் பேசுகிருர்—.

பம்பாயில், அடங்கியதுபோல் தோன்றிய காலித்தனம், திரும்பவும் 29--1--56 ல் தலைதூக்கிக் கல்லடியும் காலாடித்தனமு முண்டாக்க, போலீசார் பீரங்கிப் பிரயோகம் தொடங்வேண்டிய

அவசியமும் ஏற்பட்டதாம், ஒரிஸ்ஸாவில் கலகமும் கொள்ளையும் கணக்கில்லாச் சொத்து நஷ்டங்களுண்டாக்கியுள்ளதாம். இதனிடை, ஆங்காங்கு, எல்லைத் தொல்லைகள் எண்ணிலாச்சேதம் விளைவிப்பதாகின்றன. ஸம்யுக்த மகாராஷ்டிரர், 'பல பாஷைப் பம்பாய் கூடாது—. ஸம்யுக்தமகாராஷ்டிர ராஜ்யமே வேண்டும்'—என்று பலத்த கலகம் கிளப்பியுள்ளனர்--: ராஜஸ்தான் பிரதம மந்திரியார், 'இந்நிலையிலும், மற்றப்படி அரசியல் காரணங்கள் கொண்டும், குஜராத்--ராஜஸ்தான--மகாராஷ்டிரர் கூடிய பஸ்சிம பிரதேசம் ஏற்படுவது இயலாதே'--என்று, மர்மமாய்ப்பேசுகிறார்.

பாஷாவெறித் தீயில் திசாவாரிப் புனரமைப்புநெய் ஊற்றப்பட்டு, இந்தியா முழுதும் குடியரசுஅனல் கனிந்து, தேசிய உணர்ச்சிஜ்வாலைகள் எழும்பிப் பரவிப் போகுங்கால், ஜனவரி 31-ந் தேதி முடிந்து, ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனூட்டிய மாகாணப் புனரமைப்பு மசோதா, மாகாணப் பரிசிலனைக்கு விடப்படவேண்டிய நேரத்தில், பிப்ரவரி முதல்தேதி, பங்களூரில், Ecafe வருஷாண்டு நிகழ்ச்சித் திறப்புவிழா நடத்திடப்போகும் பிரதமர் நேருஜி, அங்கேயே தக்ஷணப் பிரதேச ஸ்தான விஷயம் பேசித் தீர்மானிக்க, சென்னை, கேரள பிரதம மந்திரிகளை வரச்சொல்லியுள்ளாராம்: ஸ்ரீ C. சுப்ரமணியமும், ஸ்ரீ பக்தவத்ஸலமும் இப் பேச்சில் பங்கெடுத்துக் கொள்வார்களாம். திருவாங்கூர் பிரதம மந்திரி, ஜனவரி 31ல் கேரளம் வரும் ஜனாதிபதியை வரவேற்றுவிட்டு, பிப்ரவரி முதல்தேதி பங்களூர் வந்து விடுவாராம். இவருக்குத் தக்ஷிணப்பிரதேச ஸ்தாபனம சம்மதியே—.

ஆனால்!—. சென்னை பிரதம மந்திரியார் என்ன செய்யப் போகிறார்?—அவருக்கே தெரிந்தாலல்லவா நமக்குத்தெரிவிக்க!- தமிழரசுக்கழகத்தலைவர் ம.பொ.சி. தற்காலிகமாகத்தனதுமேடுகுள எதிர்ப்புப் பிரசாரங்களை நிறுத்தி வைத்திருப்பதாகப் பயமுறுத்தியுள்ளார்—. பாம்பறியும் பாம்பின்கால்!—. தூத்துக்குடி முனிஸிபல் விழாவொன்றில் நேற்றுப்பேசிய ஸ்ரீ A. ராமஸ்வாமி முதலியாரவர்கள்,—'தினசரிப் பத்திரிகை சொல்வதை நம்பாதேயுங்கள். என்று—. எது—, எங்கு—, எப்படி நடக்குமோ, இன்று எவராலும் எடுத்துக்கூற முடியாது!—. தமிழ்ப்பண்பு, தனித்துத் தலைதூக்கி விளங்கப்போகிறதோ, தக்ஷிணப் பிரதேசத்தில் கலந்து மறைந்து மங்கப் போகிறதோ!—. நாம் வேண்டுவது சாந்தியும், சமர்த்தியுமே--. நம்மைத்தான நேரு கைகளில் ஒப்புவித்து விட்டோமே,—. என்று, ஒரு கண் சிமிட்டியும், ஒரு கண் நீர் வடித்தும், தமிழர்களுக்கும், தக்ஷிணப் பிரதேசத்தாருக்கும் அனுதாபப் பட்டிருக்கிறார்--. இதையெல்லாங்கண்டும் கேட்டும் வரும் காமராஜரை, தினசரி நிருபர்கள் தொந்தரவு செய்தால், அவர் எதைத் தைர்யமாய்ச் சொல்லக்கூடும் பாவம்? 'நான் பங்களூர் போவது, தக்ஷணப் பிரதேச ஸ்தானத் தீர்மானப் பேச்சிற்காக வல்ல--. Ecafe விழாவிற்காகவேதான்--. போகிற, வருகிற வழியில், யாராவது, தக்ஷிணப் பிரதேசப் பேச்சு சபைக்குக் கைப்பிடித்திழுத்தால், அங்கேயும் போய், உட்கார்ந்துவிட்டு வரத்தான் நேரும். நமக்குத் தக்ஷிணப் பிரதேசம் அனுகூலமா, பிரதிகூலமா என்பது, இச்சமயம் நான் சொல்லமுடியாது--. பொதுஜன சம்

மதி பெற்றதாகுமாகில், தக்ஷிண பிரதேச ஸ்தாபனம் வரவேற்கக் கூடியதே!,-ஐயோ ராஜரே!—சுயராஜ்யத்திலும் முதன் மந்திரியான உமக்குச் சுயேச்சை இல்லையா?--அதுவே,--சக்ரவர்த்தித் திருமகன் தொண்டன்,--தென்னிந்தியத் தாத்தா,— ராஜாஜி, யு-பி-ஐ நிருபர்களுக்குச் சொன்னதைக் கவனித்தீர்களா?—'காலாடிகளையும், கலாட்டாக்களையும், ஈவிரக்கமின்றி, தயாதாக்ஷண்யங் காட்டாது, இரும்புக் கைகள்கொண்டு, இறுக்கி நறுக்கி அமுக்குங்கள்—. இன்றைய நிலையில், மாகாண எல்லைகளில், எவ்வித மாறுதல்களும், புனரமைப்பும் வேண்டியதேயில்லை. அளவுக்கு மிஞ்சிய அநேக காரியங்களை ஒரே சமயத்தில் கைக்கொண்டு முடித்திட முயல்வது, தனிப்பட்டோருக்கும் தகாது—. அரசாங்கத்துக்கும் ஆகாது.— 'யதாஸ்தானம் பிரதிஷ்டாபயாமி,—, என்று, இந்திய நாட்டை, முன்னிருந்த நிலையிலேயே விடுங்கள்—. வெட்டு ஒன்று, துண்டு இரண்டேயான பேச்சு!—. நேருஜீயும் இதைக் கவனிக்க வேண்டியவரே—. 'அளவுக்கு மிஞ்சிய அநேக காரியங்களை ஒரே காலத்தில் கைக்கொண்டு', கலவரப்படுவானேன்?—ரஷ்ய நிருபர்களிடம்—'இந்தியாவிலும் ருஷ்ய பாஷை பயின்றிடச் செய்யப் போகிறேன்—' என்ற பேச்செதற்கு?—. நேற்று நடந்த தமிழ்ப்பண்பாளர் மகாநாட்டிலே, ஈ. வெ. ரா; ம. பொ. சி; அண்ணாதுரை—உட்பட்ட பல்வேறு கல்வியாளர்களும், அரசியல்வாதிகளும் கலந்து, 'இந்திய யூனியன் பொதுப்பாஷை ஆங்கிலமேயாக வேண்டும்—' என்று ஒருமனதாய்த் தீர்மானித்துவிட்டார்களே!—இதன் மர்மம் என்னவோ!—விளைவு ஏதோ!—. அது வேறு தொல்லை கிடக்கிறது—.



இந்தியப் பிரதமரே!—ஸாஹித்ய அகாடமித் தலைவராயிருந்து, பதினான்கு பாஷைப் புலவர் மகாநாடு, அகில இந்திய ரேடியோவில் திறந்து வைக்கையில், 'அவரவர் பாஷையும் இலக்கியமுமே அவரவர் உயிர்நாடியும் ஆவியுமாவது—. இவற்றினைப் போற்றி வளர்த்திடாதார் நாட்டில் சுகபோகம் நிலவாது—' என்று வேறு புத்தி புகட்டிவிட்டீரே!—இதன் அர்த்தமென்ன?—. உமக்கென்ன!—கூப்பிடுமிடமெல்லாம் குசாலாகப் போய், மனம்போன போனபடிக்கெல்லாம் சமயோசித சமத்காரப் பேச்சைக் கொட்டிவிட்டு வந்துவிடுகிறீர்—. அதன் விளைவையும், பலனையும் அனுபவிப்பது யார்?-, போதாக்குறைக்கு, இனஷ்யூரன்ஸ் தொழிலை, 'நேஷனலைஸ்' பண்ணப்போவதாகப் பேச்சு வந்து, ஊர் வம்பு வலுக்கிறது—, அதோடு விடாது, பாங்குகளையும் 'நேஷனலைஸ்' பண்ணப் போவதாகவும் பேச்சு வந்துவிட்டது!—பஸ்-டிரான்ஸ்போர்ட்-நேஷனலைஸேஷன் பலன் அனுபவிப்பது போதாதா?

பஞ்சாக்னி மத்தியில் வெளிக்கிளம்பப் போகும் தக்ஷிணப் பிரதேசப் பேச்சிலிருந்தா நமக்குச் சாந்தியும் சமர்த்தியும் கிட்டப் போகிறது?—ஹும்.........வள்ளுவரை இச்சமயந்தான் நினைக்க வேண்டும் நமது தலைவர்கள் ஒவ்வொருவரும்!

'யாகாவா ராயினு நாகாக்க.—காவாக்கால்
சோகாப்பர் சோல்லிழுக்குப்பட்டு'—

---



# ஸ்ரீ ஜெகதாபி ரகுபதி ரங்கராஜுகாரு

தமிழ் நாட்டில் நாவல்கள் படிக்கும் மவுசு ஏற்பட்ட அக்காலத்தில் பல ஆங்கில மொழி பெயர்ப்புநாவல்கள் வரத் தொடங்கின. மொழிபெயர்ப்பல்லாத, நாவல்களில் மேற்பட்ட ராஜம்பாள், மோகனசுந்தரம், இராஜேந்திரன், சந்திரகாந்தா; ஆனந்த கிருஷ்ணன், ஜயரங்கன், வரதராஜன் போன்ற துப்பறியும் தமிழ்நாவல்களை ஸ்ரீ ஜே. ஆர். ரங்கராஜு இயற்றிப் பெரும் புகழை அடைந்தார். இவருடைய புத்தகங்களுக்கு மக்களிடையே இருந்த வரவேற்பை நோக்கிய பல நாடகக் கம்பெனிகள் இவரது நாவல்களை நாடக ரூபமாக தமிழ் நாட்டின நாடக மேடைகள் பலவற்றிலும் ஒட்டத்தொடங்கின. புகழ்பெற்ற மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பனியார், மதுரை தேவி பாலகான விநோத சங்கீத சபையார் நவாப் T. S. ராஜமாணிக்கம் கம்பெனி போன்ற பல கம்பனியார் இவரது நாடகங்களை நடத்தியுள்ளனர். சினிமா உலகில் புகழ்பெற்ற பி. யு. சின்னப்பா, எம். கே. ராதா, சகாதேவன், காளி என். ரத்தினம், சாரங்கபாணி, டி. கே. எஸ். சகோதரர்கள் போன்றோர் இவரது நாடக கதாபாத்திரங்களில் நடித்துப் பெரும்புகழை அடைந்துள்ளனர். இவரது நாவல்களில் இராஜாம்பாள், மோகனசுந்தரம், சந்திரகாந்தா முதலிய நாவல்களெல்லாம் சினிமாப்படங்களாக்கப்பட்டிருக்கின்றன.

இவர் 1875ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ம் தேதி திருநெல்வேலி ஜில்லா, தாமிரபரணி நதிதீரத்தில் உள்ள பாளையங்கோட்டை என்னும் ஊரில் போஸ்டல் இன்ஸ்பெக்டர், ஸ்ரீ ஜே. ஸ்ரீரங்கராஜுவுக்கும், ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாளுக்கும் மூன்றாவது புத்திரனாகப் பிறந்தார். இவரது மூத்த சகோதரர்களான

ராவ்பஹதூர் ஜே. தர்மரங்கராஜுவும், ராவ்பஹதூர் ஜே. செல்வ ரங்கராஜுவும் அரசாங்கத்தில் பெரும்பதவிகளை வகித்தவர்கள். இவர் மட்டும் அக்காலத்திலிருந்தே காங்கிரஸ் மகாசபையில் அங்கத்தினராய் உழைத்தவர். இவர் வசித்து வந்த சைதாப் பேட்டையில் நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்து பல வருடங்களாக தொண்டாற்றியுள்ளார். அக்காலத்தில் இவர் சம்மந்தப்படாத கூட்டங்களோ, தேர்தல்களோ, செங்கற்பட்டு மாவட்டத்திலேயே இடையாது. காலஞ்சென்ற காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ முத்துரங்க முதலியார் அவர்கள் இவரது ஆப்த நண்பராவர்.

சென்னையிலேயே முதன்முதலாக பால்பண்ணை (Dairy) ஒன்றை 1902ம் வருடத்திலேயே ஆரம்பித்து அக்காலத்திய ஆங்கிலேயரும் கண்டு வியக்கும்படி திறம்பட பல்லாண்டுகள் நடத்தியுள்ளார். உயர்ந்தரக கறவை மாடுகளை வளர்த்து அதற்காக கால்நடைக் கண்காட்சியில் பல தங்கக் கோப்பைகளும் மெடல்களும் வாங்கியுள்ளார்.

தம்முடைய புத்தகங்களை அச்சடிப்பதற்காக தாமாகவே ஒரு அச்சகத்தை 1922ம் வருடத்தில் சென்னை வாலாஜாரோட்டில் ஆரம்பித்து முதலில் சென்னையிலும், பின்னர் சைதாபபேட்டையிலும் 1951 வருடம் வரை நடத்தியுள்ளார்.

விவசாயத்தில் இவருக்கு இளமை முதல் இருக்கும் பற்று அளவிட முடியாது. மேல்நாட்டைப் போல் தமிழநாட்டு விவசாயிகளுக்குத் தொழில் நுணுக்கங்களை விளக்கிக் கூறும் பத்திரிகை இல்லாத குறையைப் போக்க 1903ம் வருடத்தில் "கிருஷிகன்" என்னும் விவசாயப் பத்திரிகையைத் தொடங்கி பல ஆண்டுகள் நடத்தியுள்ளார்.

80 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த இம்முதுப்பெரும் கிழவர் உறவினர்களுக்கும், அன்பர்களுக்கும் ஒருபெரும் ஊன்று கோலாகத் திகழ்ந்தார். இவரது மறைவு தமிழ் நாட்டிற்கு ஒரு ஈடு செய்ய முடியாத நஷ்டம். அவரது ஆன்மா சாந்தியுறுவதாக.

---

1955 ஸு நடைபெற்ற

குழந்தைகள் நாடக விழாவில்

திருவல்லிக்கேணி மஹாத்மாஜி ஸேவா சங்கத்தின் பாலிகா கழகத்தினரால் நடிக்கப்பட்ட

வை. மு. கோ. எழுதிய நாடகம்

# கருணை உள்ளம்

113-வது பிரசுரம் அணா 12

நவீனத்தின் நாயகன்

# ஸ்ரீ B. R. ராஜமய்யர்

## சரித்திரம்

எந்தகாலத்திலும் எந்த ஒரு மனிதனையும் ஞான வழியில் திருப்புவதற்கோ! ஈன வழியில் திணிப்பதற்கோ! அந்தந்த காலத்தின் போக்கிற்குத் தக்கபடி சில சம்பவங்களைக் கடவுள் காட்டியே செய்கிறார். அதேபோல் ஸ்ரீ ராஜமய்யர் அவர்களின் மனத்தை ஒரேயடியாக மாற்றி விடுவதற்காக B. L. பரீக்ஷையில் தோல்வி என்கிற அதிர்ச்சியைக் காட்டினார். அந்த தாக்குதலில் இருந்து சாந்தி பெறுவதற்காக வ்யாஸங்களையும் விமர்சனங்களையும் பத்ரிகைகளின் மூலம் வெளியிட்டு நற்க்யாதியை அடையவும் உலகம் அவரைத் தெரிந்துகொள்ளச் செய்யவும் உலகத்தை அவர் புரிந்துகொள்ளச் செய்யவுமான சந்தர்ப்பங்களை பகவான் காட்டியதன் மூலம் ராஜமய்யர் முற்றிலும் புதிய மனிதராகவே காணப்பட்டார்.

இக் காலத்தைப் போல் அக்காலத்தில் கீரை விதைபோல் மதிப்பும் மாண்பும் அற்ற முறையில் பூச்சிப் புழுக்கள் புழுப்பதற்கொப்பாகப் பத்ரிகைகள் வரவில்லை. அக்காலப பொது மக்களின் உணர்ச்சிக்கும் அறிவுக்கும் தக்கபடி காலதேசவர்த்தமானங்களையொட்டி நீதியை போதிக்கும் முறையிலேயே ஒரு சில பத்ரிகைகள் தான் கம்பீரமாக உலாவி வந்ததாம். அத்தகைய பத்ரிகைகளில் "விவேக சிந்தாமணி" என்கிறபத்ரிகை மிகச் சிறப்புடன் விளங்கியதாம். 1892 வருஷத்தில் ஸ்ரீ ராஜம்மய்யர், தமிழிலும் ஆங்கிலத்திலும் பல பல உபயோகமான உயர்ந்த விஷயங்களைத் தமது மனோதர்மப்படிக்கும் சாஸ்திர சம்பிரதாயப் படிக்கும் முக்யமாய் மதவிஷயமாயும் வெகு அழகாக எழுதி வைத்தாராம். அந்த சமயத்தில்தான் தமது மனோ கற்பனையயுடன் மனித சமுதாய வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத பல விஷயங்களைத் திரட்டி கடைந்தெடுக்கப்பட்ட அமுதம்போன்ற நவீனமாகிய "கமலாம்பாள்" சரித்திரம் அல்லது "ஆபத்துக்கிடமான அபவாதம்" என்பதை எழுதினாராம். அப்புத்தகத்தின் மூலம் தமது அபிப்ராயங்களை ஒவ்வொரு அத்யாயத்தின் மூலம் வெகு திறமையாயும் புதுமையாயும் வெளியிட்டார். அக்காலத்தில் பன்னிரெண்டு மந்திரி கதை பஞ்ச தந்திரக் கதை, விக்ரமாதித்யன், தெனாலிராமன், போன்ற சில பழய சரித்திரக் கதைகள் தான் ப்ரஸித்தமாக இருந்தன. கற்பனைக் கதை என்பது ஆங்கில பாஷையில் இருந்ததை ஆங்கிலம் படித்த சிலர்தான் படிக்க முடிந்தது. நமது தாய் நாட்டில் தாய்ப் பாஷையில் கற்பனையலங்காரத்துடன் புத்தப்புதிய கதை வெளி

கே. சூடாமணி

வந்ததில் ஐயர் அவர்களின் மேதை ஊற்றிலிருந்து வந்த கமலாம்பாள் சரித்திரமே மக்களின் இதயங்களில் ப்ரதான இடம் பெற்று விட்டது.

கதையின் அத்யாயங்களில்வரிசையாக,—புத்திரசோகமென்ற அத்யாயத்தில் சோகரஸத்தையும், பலீன்குடுகுடு கடற்கரை விளையாட்டு என்கிற அத்யாயங்களில் மிகச் சிறந்த கற்பனைசக்தி நிறைந்த காவ்யரஸானுபவங்களையும், நரபலி என்கிற அத்யாயத்தில் ஆருத்ரா தர்சன வைபவத்தையும், பக்தி அனுபூதி விஷயங்களை இன்னும் சில அத்யாயங்கள் மூலமும் இந்த மகான் வெகு அழகாகவும் தெளிவாகவும் விளக்கி நவீன உலகத்தின் சக்ரவர்த்தி போன்று தமக்கென ஒரு தனி இடம் பெற்று விட்டாராம். தாகத்தால் விடாய்த்த ஒருவள் உண்மையின் சொருபம்; தத்துவஞானம்; கடவுளின் சத்ய தரிசனம் முதலிய சன்மார்க்க வழிகளைக் காணமுடியாது தத்தளிக்கும் ஆத்மா தன் விடாமுயற்சியால், உழைப்பால், உபதேசத்தினுல், நல்ல பரிசுத்தத் தடாகத்தைக் கண்டு தாகசாந்தி செய்துகொண்டதுபோல் கமலாம்பாள் சரித்திரக் கதையில் ஸாரத்தை எழுதியிருப்பதாக ஐயரே பலரிடம் நேரிலும் சொல்லி இருக்கிருராம். தவிர சரித்திரத்தைப்பற்றி வெளியிட்டுள்ள தமது அபிப்ராயத்திலுைம் தெரிந்து கொள்ளலாம். இத்தகைய உயரிய வேலைகளையே முக்யமாகச் செய்து வரும் பேராவலில் மற்றய சகல வேலைகளையும் கவனிக்காமல் கைவிட்டார் என்றே சொல்லலாம். தவிர அவர் எவருடைய பார்வைக்கும் அகப்படாமல் தனிமையை மிகவும் விரும்பி நாடிஞர். தனிமையான சாந்தியிலமர்ந்துத் தன் விருப்பப்படி வெற்றி பெறவே அவருடைய ஆவல் பறந்தது. அதிக ஜனநடமாட்டமுள்ள பட்டிணவாஸத்தில் அதிசயிக்கத் தக்கத் தனிமையை அவர் கண்டார் என்ருல் அவருடைய பண்பாட்டின் பரிபக்குவமான நிலைமையைத்தான் சொல்ல வேண்டும். சென்னையிலுள்ள திருவல்லிக்கேணியில் அவர் அக்காலை வஸித்து வந்தார். ஆழ்வார்களும் இதர பக்தர்களும் பாடிப் பரவசத்துடன தோழுது பூரித்த திவ்ய ஸ்தலமாகிய திருவல்லிக்கேணியில் அவர் மனத்திற்கு சாந்தியின் சக்தி கிடைக்கும்படியாக ஒரு சம்பவம் அமைந்தது. அதாவது அவர் வஸித்து வந்த விட்டிற்கு அருகாமையில் ஒரு வீட்டில் சன்யாஸினி ஒருவர் மிக்க அறிய விஷயங்களை உபன்யாஸம் செய்துவரும் செய்தியை ஸ்ரீ ஐயரவர்கள் கேட்டு மிகமிகச் சந்தோஷமடைந்து ப்ரதி தினமும் அந்த உபன்யாஸத்திற்குச் சென்று சாந்தமாயும் மவுனமாயும் ஓர் ஒதுக்குபுரமான இடத்திலமர்ந்து விஷயத்தைக் கேட்டு வந்தார்.

அந்த சன்யாசினிக்கு இவர் யார் என்பது தெரியாது. எனினும் அடக்கம், சாந்தம், மவுனம், ப்ரஸன்னவதனம் விஷயத்தில் அதிகபரீதியுடன் கேட்கும் ருசி, இவைகளை அந்த அம்மாள் நாளடைவில் தெரிந்துகொண்டு சந்தோஷப்பட்டதோடு இவரிடம் பேச வேண்டும் என்று பேராவல் கொண்டாள். ப்ரதிதினமும் உபன்யாஸம் முடிந்த உடனே கூட்டத்துடன் கூட்டமாக எழுந்து சென்றுவிடும் ஐயரைக் கண்டு பேசும் சந்தர்ப்பமே வாய்க்கவில்லை.

ஒரு தினம் வெகு அதிபுதமான விஷயத்தை சன்யாஸினி மிகமிக உருக்கமாகப் பேசியதைக் கேட்ட ஐயர் தம்மை மறந்து

போய் அவ்விடத்திலேயே அப்படியே அசைவற்று அமர்ந்து விட்டார். ஜனத்திறள் கலைந்ததும் ஐயருக்குத் தெரியாது. ஏகாக்ரசித்தத்துடன் வீற்றிருப்பதைக் கண்ட சன்யாசினி இதுதான் சமயமென்பதை அறிந்து அவரைத் தன்னருகில் அழைத்தாள்.

அப்போதுதான் தன் சுய புத்தியுடன் தெளிவுபெற்ற ஐயர் மிகுந்த மரியாதையுடன் பயபக்தியாய்ச் சிறிதும் கூச்சமின்றி சன்யாஸினியின் எதிரில் சென்று வணங்கினர். அந்தம்மாள் மிகுந்த ப்ரீதியுடன் ஐயரிடம் தத்வ விசார விஷயமாகவே பேசி அவருடைய மனோநிலையை விசாரித்தாள். ஐயரவர்களும் தமது மனத்தை விட்டு சங்கோஜமின்றி தம்முடைய மத விஷயத்தில் தாம் கொண்டுள்ள எண்ணங்கள்; படிப்பு விஷயத்தில் தமக்குத் தெரிந்துக்கொள்ள வேண்டிய சந்தேகங்கள்; முதலியவைகளைக் கேட்டுப் பின் "தாயே! பெரியோர்கள்—ஞானிகள்—பெற்ற அனுபூதிகள் எனக்கெப்போது உண்டாகும்?" என்று பளிச்சென்க் கேட்டார்.

அப்போது 'ஸ்ரீ ஐயரவர்களுடைய முகத்தில் ஜ்வலித்த ஒரு சாந்தியையும், ப்ரம்மதேஜஸ்ஸையும்கண்ட சன்யாஸினிவியப்புற்றாராம்! இத்தனை சின்ன வயதில் இத்தகைய பேரின்ப மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை யடையும் மகத்தான ஆசை எப்படி உண்டாயிற்று! இத்தகைய தத்வங்களைக் கேட்கவே பிடிக்காத மக்கள் நிறைந்த இக்காலத்தில் இவருக்கு ஏற்பட்டுள்ள ஆசை வியக்கத் தக்கது! என்று தமக்குள் பூரித்தாராம். தம்மையறியாமல் ஐயரிடத்தில் அளவற்ற கருணையும் மதிப்பும் உண்டாகியதாம். அத்தகைய மதிப்புடன் ஸன்யாஸினி ஸ்ரீ ஐயரவர்களைக் கருணையுடன் கூர்ந்து கவனித்தவாறு கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிப் பின்னர் உள்ளம் நிறைந்த பக்தியுடன் ஐயரின் தலையில் தன் கையை வைத்து ஆசீர்வதித்தார்.

அப்போது சொல்லத் திறமற்றதும், அளவில் அடங்காததுமான ஓர் பேரானந்தமும் எங்கும் வ்யாபித்துள்ள ஒரு பரஞ்சோதி சக்தி யொன்று தம்மைச் சூழ்ந்துகொண்டது போன்ற உள்ளுணர்ச்சியாலறிந்தார். உள்ளமும் உடலும் ஒருங்கே பூரித்தது. தேக ப்ரக்ஞை உலகமயக்குமுதலிய எல்லாம் இவரை விட்டகன்று பேரின்ப நிலைபோன்ற ஆநந்தம் உண்டாகியதாம். இந்த அபாரமான உணர்ச்சியைத்தான் கமலாம்பாள் சரித்திரத்தில் விச்வரூப அத்யாயம் என்பதில் விவரித்துள்ளார் என்றுகூட ப்ரஸ்தாபம். அவர் தன்னை மறந்த நிறதிசயாநந்தத்தில் மூழ்கி சிறிது நேரம் மெய்மறந்திருந்துப் பின் சன்யாஸினியிடம் மேலும் அனேக விஷயங்களைக் கேட்டும் உபதேசங்கள் பெற்றும் பின்பு வீடு வந்து சேர்ந்தாராம். இவர் இதயத்தில் பக்தி பீடத்தில் குடிகொண்டு விட்ட அந்தம்மாளிடம் அடிக்கடி உபன்யாசங்கள் கேட்டுத் தமது அறிவுக்குச் சாணை தீட்டிக்கொண்டார். அப்போது ஒருதினம் சன்யாசினி பட்டினத்தைவிட்டு வெளியூருக்குச் சென்றுவிட்ட செய்திகேட்டு ஐயர் வருந்தினர். அந்தம்மாள் எந்த ஊருக்குச் சென்றார். எங்கிருக்கிறார் என்பதே தெரியாது போய்விட்டது.

(தொடரும்)

# மேனாட்டுத் தத்துவம்

## இரண்டாம் பாகம்

## பிளேட்டோ கண்ட சமயம்

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

ஆண்டவனை அடைகிறதே சமய நெறியாகும். இந்த உலகத்தளையை அறுத்தெறிந்து அவனைப்போல ஆக முயலவேண்டும். என்று அவர் இயம்புகின்றார். நம் ஞானிகளும் இதே சுருதியில் தான் பேசுகின்றனர். நான்தான் அவன்; அவனைப்போல நான் இருக்கிறேன் என்று இருவிதமாக ஞானிகள் பேசக் கேட்டிருக்கிறோம். அவனைப்போல ஆவது என்றால் என்ன? என்று ஒருவர் வினவலாம்.

அறநெறியில் நிற்பதும், உளம் உரை, செயல் இம் மூன்று நிலைகளிலும் தூய்மையாய் வாழ்க்கையை நடத்துவதுந்தான் ஆண்டவனைப்போல ஆகுவதாகும். நியாயம் என்பது ஆண்டவன் சங்கற்பிப்பதா? அல்லது எது நியாயமோ, அதை அவன் சங்கற்பிக்கின்றானா?—இத்தகைய கேள்விகளை எழுப்புகின்றனர். நியாயமும் தூய்மையும் ஆண்டவன் ஒருவன் இருக்கின்றார் என்ற எண்ணத்திற்கு முன் ஏற்பட்டனவா? அல்லது பின் நிகழ்ந்தனவா? என்ற கேள்வியும் பிறக்கின்றது.

அறநெறியில் நிற்பதால் பல இன்னல்கள் ஏற்படவாம்; அறப்பாதையைவிட்டு விலகி நிற்பவர்கள் பல இன்பங்களை நுகரலாம். அதைப்பற்றிக் கவனியாமல் இன்பமோ துன்பமோ அறப்பாதையில் நின்று அகவுயிரைப் பேணுதலே சான்றோர்களின் நோக்கமாகும். நம்முடைய உண்மையான ஆத்ம சுவரூபம் தெரியுமானால், ஆண்டவனுடைய வடிவைக் காண்போம் என்கிறார். இதைத்தான் வைணவர்களும் உபதேசிக்கின்றனர். தன்னைத் தான் அறிதலே இன்பமாகும. உடலைப் பேணுவதன்று; பொன்னைப் பேணுவதன்று? ஆத்மாவைக் காப்பாற்றுவதுதான் சிறந்தாகும் என்று சாக்ரடீஸ் சாற்றுகின்றார். தெமிஸ்டியஸ்ஸுக்கு (Themis teus) சக்ரவர்த்தி ஜூலியன் எழுதிய கடிதம் இங்கே நோக்கத் தகுந்தது. 'அலக்ஸ்ஸாண்டரின் வெற்றிகளெல்லாம் சாக்ரடீஸ்ஸின் ஞானவொளிக்கு முன் நிற்குமோ? பிளேட்டோவுக்கு ஞானம் ஏற்பட்டது அவரால் அன்றோ? அலக்ஸ்ஸாண்டரின் வெற்றிகளில் மனிதனின் விடுதலையைக் காண இயலுமோ? என்று அவர் கூறுகின்றார்.

உடலின் கோளாறால் ஆத்மா தன்னுடைய தூய்மையான நிலையை அடைய முடியவில்லை. ஆத்மாவில் இரண்டு சக்திகள் போராடுகின்றன; ஒன்று கீழ்நோக்கி அதை இழுக்கின்றது; மற்றொன்று அதை அழியாத நிலையை அடைய உயரத் தூக்கு

இன்றது. உடல்கள் நைந்து அழிந்து விடும், "ஆனால் ஆதியும் அந்தமும் இல்லாத ஆத்மா அமரத்வம் வாய்ந்தது. தத்துவம் என்பது மரணத்தைப் பற்றிய சர்ச்சை அன்று; மரணத்திற்கப் பாலுள்ள அமர வாழ்வைப்பற்றித்தான் சான்றோர்கள் சிந்தனையில் ஆழ்கின்றனர். சாக்ரடீஸின் அசைக்கமுடியாத நம்பிக்கை இதுதான்: வாழ்க்கையிலும் சரி, மரணததிலும் சரி, ஒரு நல்லவனுக்கு யாதொரு கெடுதலும் நிகழாது. ஆனால் நான் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளாதீர்கள் அவரவர் அகஒளிக்கு ஒத்ததாயின் ஆமோதியுங்கள் என்று அச்சான்றோர் சாற்றுகிறார். ஹெஸியட் (Hesiod) என்பவர் கூறும் உபதேசமும் இங்கே சிந்தனைக்குரியது. உயர்ந்த உபதேசத்திற்குச் செவி சாய்க்கிறவனை நல்றவன்தான; ஆனால் தானே விஷயங்களைச் சலித்து ஆராய்ச்சிசெய்கின்றவனே மிக உத்தமன். இதைத்தானே நம் திருவள்ளுவரும் கூறுகின்றார் 'எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' மரணத்திற்கு அப்பால் ஆத்மாவுக்கு ஓர் அமரவாழ்வு உண்டு என்ற கருத்தைத் தான் பிளேட்டோ வற்புறுத்துகின்றார். அப்படியெல்லாம் அவர் கூறவில்லை. ஏதோ ஓர் அகண்டமான பொருளைத்தான் அவர் சித்திரிக்கிறார். தனிததனியான ஆத்மாக்களுக்கு அவர் கண்ட தத்துவத்தில் இடமில்லை என்று ஹெகல் போன்ற ஜெர்மன் தத்வ ஞானிகள் மொழிகின்றனர் ஆனால், பிளேட்டோ நூலை ஆராய்வோர்க்கு அத்தகைய எல்லாவற்றையும் கடந்ததன்ற அகண்டகார ஏக ஆத்மவாதத்தைப்பற்றி (Transcendentalism) அவர் பேசவில்லை என்று நன்கு புலனுகும்.

நினைவு அழிந்துபோகிறதில்லை, என்றால் மரணம் வந்தாலும் ஆத்மாவிற்கு அழிவில்லை என்றது இந்த உண்மையிலிருந்து பிறக்கின்றதன்றே, பல ஆத்மாவாதத்தைப் பற்றித்தான் அவர் பேசுகின்றார் என்பது இதிலிருந்து தெளிவாய் நாம் அறிய முடியும். ஆத்மா எப்படி அழியவில்லையோ, அதைப்போல பரமாத்மாவும் இருக்கிறார். ஆத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அறிவிலும் வடிவிலும் ஆத்மா பரமாத்மாவை ஒக்கின்றது. பரமாத்மா சர்வக்ஞன், சர்வ சக்தன் யாதொரு தீய குணமும் அவனிடத்தில் இல்லை. எல்லாக் கலியாண குணங்களையுடையவன என்று கூறுகின்றார் அவன் கேவலம் அறிவு மட்டு மல்லன் சுத்த சைதன்னியமும் அல்லன் அவனுக்குச் சுபரூபம் உண்டு.(Personality) 'ஹேயகுணரஹிதன' தீய குணங்களற்றவன் என்பது வைணவர்கள் துணிவன்றே? நமமுடைய சரீரத்திற்கும் எப்படி ஆத்மாவோ, அப்படித்தான் இந்த அகிலபிரபஞ்சத்திற்குப் பரமாத்மா இருக்கிறக, இதே கருத்தை டி. ஹெசிலாரன்ஸ் D. H. Lawrence தம்முடைய கடிதங்களில் ஒன்றில் நமக்கு அளித்திருக்கிறார்.

(தொடரும்)

❋

# மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

மணி ஏழு அடித்தது. லக்ஷ்மி, "டேய் ராஜு, கிட்டு, கமலா எல்லோரும் ஓடி வாருங்கள் பால் பொங்குகிறது பார்க்கலாம்" என்று கூப்பிட்டாள். மூன்று பேரும் ஓடிவந்து பால் பொங்குவதைப் பார்த்துவிட்டு "பொங்கலோ! பொங்கல்! பச்சை பொங்கல்! பாலு பொங்கல்! சக்கரைப் பொங்கல்!" என்று சந்தோஷமாகக் கத்தினார்கள். ராஜு, அம்மா! அம்மா! எதிர் ஆத்துலேகூட பால் பொங்கிடுத்தும்மா" என்று கூறினான். "சரி சரி. எல்லோரும் போய் கூடத்தில் விளையாடிண்டு இருங்கள். சமையல் ஆனதும் கூப்பிடறேன்".

"போம்மா! நாங்க இங்கேயே நின்னுண்டு நீ பண்றதைப் பாக்கறோம்."

"இன்னிக்குப் பொங்கல் பண்டிகை. அம்மா சொல்ற பேச்சைக் கேக்கலேன்னு பெருமாளுக்குக் கோவம் வந்துடும். அதனாலே நான் சொல்றபடி கேக்கணும்" என்று சொல்லிக்கொண்டு இருக்கும்போது வாசலில் கும்மி அடிக்கும் ஓசை கேட்டது. உடனே மூவரும் அதை வேடிக்கை பார்க்க ஓடிவிட்டனர்.

சமையல் வேலை முடிந்ததும் லக்ஷ்மி, ராஜா கிட்டு, கமலா மூவருக்கும் சாதம் போட்டுவிட்டு, அவர்களைப் பார்த்து "நீங்கள் மூணு பேரும் சமர்த்தா ஆத்துலேயே விளையாடிண்டு இருங்கோ, நான அஞ்சு நிமிஷத்துலே கோயிலுக்குப் போயிட்டு வந்துடறேன். ரோட்டிலே போய் விளையாடக்கூடாது; சைகில், மோட்டார் எல்லாம் வரும். சொல்ற பேச்சைக் கேக்கலேன்னு அப்பா அடிப்பா. என்ன?" என்று சொல்லிவிட்டு கோயிலுக்குப் போனாள். அம்மா எதிரில் மூவரும் தலையை ஆட்டிவிட்டு, லக்ஷ்மியின் தலை மறைந்ததும் ரோட்டுக்கு ஓடிவிட்டனர். பக்கத்து வீட்டுப் பசங்களுடன் ஓடி விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது தெருக் கோடியில் ஒரு டாக்ஸி வேகமாக வந்துகொண்டிருந்தது. தங்களுடைய விளையாட்டு ஜோரில் பசங்களுக்குக் கார் வருவது தெரியவேயில்லை. டாக்ஸி இவர்களிடம் நெருங்கிவிட்டது. அப்போது தான் திரும்பிப் பார்த்த பசங்கள், "ஐயோ! அம்மா! கார் வருதே!" என்று மூலைக்கொருவராய் பிச்சிக்கொண்டனர். கிட்டுவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எந்தப் பக்கமும் ஓடாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். காரை ஓட்டுபவன் எப்படியோ சமாளித்து 'ப்ரேக்' போட்டுக் காரை நிறுத்திவிட்டான். கார் ரொம்ப வேகமாக வந்துகொண்டிருந்ததால் சடக்கென்று ப்ரேக் போட்டும் கிட்டுவை முட்டிக் கீழே தள்ளிவிட்டது.

ராஜுவிற்கும், கமலாவிற்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. அப்பாவிடம் சொல்லவும் பயமாக இருக்கிறது. உடனே ஒரு யோசனை தோன்றியது. இருவரும் ஓடிப்போய் கிட்டுவை மெள்ள எழுப்பி அழைத்து வந்தார்கள். கார் முட்டித் தள்ளியிருந்ததால் உடம்பெல்லாம் சுருய்ச்சி இருந்தது. அழுதால் மாடியிலிருந்து அப்பா வந்து விடுவாரே என்று கிட்டுவும் அழாமல் வலியைப் பொறுத்துக்கொண்டான். உடனே ஒரு ரிக்ஷாவைக்

கூட்டு அதில் மூவரும் ஏறிக்கொண்டு பக்கத்துதெருவில் இருந்த டாக்டர் வீட்டுக்கு போகச் சொன்னார்கள். டாக்டரிடம் மருந்து போட்டுக்கொண்டு வீடு திரும்பினர்: அம்மா கோவிலிலிருந்து வந்துவிட்டாளா? என்று பார்த்தனர். இன்னும் வரவில்லை. மூன்று பேரும் ஓசை செய்யாமல் பின்பக்கம் சென்று கிணத்தடியில் உட்கார்ந்திருந்தனர்.

லக்ஷ்மி கோவிலிலிருந்து வீட்டுக்கு வந்து ராஜு, கிட்டு, கமலா, மூவரையும் தேடிப் பார்த்தாள். அவர்களைக் காணவில்லை வாசலில் போய்ப் பார்த்தாள், அங்கும் இல்லை. பக்கத்து வீட்டுக்கு போயிருப்பார்கள், வேறெங்கும் போயிருக்கமாட்டார்கள் என்று தன் வேலையை கவனிக்கச் சென்றாள், பிறகு தண்ணீர் இழுக்க கிணத்தடிக்குப் போனாள், அங்கு ஏதோ குசமச என்று பேசுவது கேட்டு மறுபக்கம் போனாள். அங்கு, ராஜு, கிட்டு, கமலா மூவரும் உட்கார்ந்திருந்தனர். கிட்டு உடம்பில் எல்லாம் காயம் பட்டிருப்பதைப் பார்த்து என்ன நடந்தது என்று விசாரித்தாள். நடந்ததை அம்மூவரும் கூறினர். பிறகு, அவர்களை உள்ளே அழைத்துச் சென்றாள். "நீங்கள் மூணுபேரும் என பேச்சை கேட்காமல் வெளியே போனதாலே தான் கிட்டுவுக்கு அடி பட்டது. உங்கள் பாடத்திலேயே "அன்னை சொல் அமிர்தம்" என்று நீங்கள் படித்திருக்கிறீர்களே அது உங்களுக்கு நினைவில்லையா? அம்மா பேச்சை கேட்காப்போனா என்ன நேருமென்பதை ஒரு கதை மூலம் உங்களுக்குச்சொல்லப்போறேன். நன்னா கேளுங்கோ"

"ஒரு ஊரிலே ஒரு எலி இருந்தது அதுக்கு ஐந்து எலிக் குஞ்சுகள் இருந்தன. அதெல்லாம் சின்னது, அதுனாலே தாய் எலி குஞ்சுகளைப் பார்த்து, "குழந்தைகளே நான் உங்களுக்கு ஆகாரம் எடுத்துவர வெளியே போகிறேன். நீங்கள் எல்லோரும் இந்த இடத்தைவிட்டு வெளியே போகாதீர்கள். வெளியே போனால் பூனை உங்களைத் தின்று விடும். அல்லது இந்த வீட்டிலுள்ளவர்கள் உங்களை பொறியில் பிடித்து விடுவார்கள்" என்று கூறிவிட்டு வெளியே சென்றது


அந்த எலிக்குஞ்சில் ஒரு குஞ்சு மற்ற குஞ்சுகளைப் பார்த்து நாம் எத்தனை நாள் இதனுள்ளேயே இருப்பது? அம்மா வருவதற்குள் வெளியே போய்விட்டு வந்து விடலாம என்றது. உடனே அந்த குஞ்சுகள் வெளியே எட்டி பார்த்தன. ஒரு பழக்கூடை தெரிந்தது. உடனே ஓடிப்போய் அந்தப் பழக்கூடைக்குள் இறங்கியது அந்த கூடைக்குள் எலிப்பொறி வைத்திருந்ததால் எலியின் வால் முழுவதும் அந்த பொறியினுள் அகப்பட்டுக் கொண்டது. அது வாலை இழுக்க முயன்று கொண்டிருக்கும்போது. கூடையின் வெளியில் நின்றுகொண்டிருந்த எலிகளில் ஒன்றை பூனை கவ்விக்கொண்டு ஓடிவிட்டது. மற்ற மூன்று எலிகளும் ஓடிப் போய் விட்டன. கூடையினுள்ளிருக்கும் எலி எப்படியோ வாலிலுள்ள தோலை உருவிக்கொண்டு வந்து சேர்ந்தது. உடனே மற்ற மூன்று எலிகளும் அதுக்கு மருந்து போட்டன.

ஆகாரம் தேடிவரச் சென்ற தாய் எலி திரும்பி வந்தது. ஐந்து எலிகளில் நான்குதான் இருப்பதையும் ஒரு எலிக்கு வாலில் அடிப்பட்டிருப்பதையும் பார்த்து என்ன விஷயம் என்று கேட்டது. அந்த எலிக்குஞ்சுகள் விஷயத்தைக் கூறின. தாய் எலி அந்தக் குஞ்சுகளை மிரட்டி "நான் சொன்ன பேச்சைக் கேட்காததனால் என்ன நேர்ந்தது பார்த்தீர்களா? இனிமேலாவது சமர்த்தாயிருங்கள்" என்றது. அந்த நான்கு எலிகளும் தலையை ஆட்டின".

உடனே கமலா, "அம்மா நீ சொன்னப் பேச்சை நாங்க கேட்காததனால்தான் நம்ம கிட்டுவுக்கு அடிபட்டது. இனிமேல் நீ சொல்ற பேச்சைக் கேட்டுண்டு சமர்த்தா இருக்கோம் எங்களை மன்னிச்சுடு என்றாள்.

---

## ரேஷன் மறைந்தும்
## அதன் நினைவு மறையவில்லை



# வாழ்க்கை தீபம்

**வை. மு. கோ.**

ஸௌபாக்யவதி லக்ஷ்மிக்கு உபய குசலம்

தீபாவளி, கார்த்திகை, பொங்கல் முதலிய பண்டிகைகள் பூர்த்தியாகி மார்கழி நோன்பு வைபவத்தில் ஆனந்தத்துடன் திளைத்து இருப்பாய் என்று நினைக்கிறேன். "இக்காலத்தில் கூட வரதக்ஷிணை வேண்டாம் என்று சொல்லக்கூடிய பிள்ளைகள் இருக்கிறார்கள். வெறும் பொம்மைக் கல்யாணத்தைச் செய்தால்கூட பொம்மை வாய் திறந்து வரதக்ஷிணை கேட்கும் காலமாயிற்றே! இது. இந்த விஷயம் உன் மாமி வேண்டும் என்று கப்பிவிடுகிறாள் என்று உன் மாமியார் சொல்லியதாக நீ எழுதியிருக்கிறாய். லக்ஷ்மீ! வியாதி முத்திபோய்விட்டால் அது கட்டாயம் தீரும் என்று வைத்தியன் சொன்னால்கூட இது ஏது இனிமேல் தீருவது. பணம் பறிப்பதற்காகச் சொல்லும் வார்த்தை இது என்றுகூட சொல்வார்கள். அதுபோலத்தான் வரதக்ஷிணை வாங்குகிற வியாதி உலகம் பூராவும் வ்யாபித்துவிட்டதால் எங்கோ ஆயிரத்திற்கு ஒருவர் இம்மாதிரி சொன்னால் அதை நம்பாது பேசுவது சகஜந்தானே! இனிமேல் இத்தகைய விஷயங்களை நான் எழுதும்போது ஊர் பேர் புகைப்படம் விலாஸம், முதலியவைகளுடன் தான் அனுப்பவேணும்போலிருக்கிறது, லக்ஷ்மீ! அதை விட இன்னொரு கல்யாணத்தின் சிறப்பை இப்போது எழுதுகிறேன். அதை நீங்கள் நம்பினால் நம்புங்கள், நம்பாவிட்டால் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை.

முன்காலத்தில் எல்லாம் ஆவணிமாதம் கல்யாணம் செய்வதையே இரண்டாம் பக்ஷமாகத்தான் வைத்திருந்தார்கள். இக்காலத்திலோ! பிள்ளைகளை ஏலத்தில் விலைகூறி விற்பதுபோன்ற வ்யாபாரத்தில் துணிந்துவிட்டப்பிள்ளை வீட்டுக்காரர்களும் பத்து, வயதாகிவிட்டால் பெண்ணைப் பள்ளனுக்கோ! பறையனுக்கோ! தள்ளு என்று முற்காலத்தில் சொல்வார்கள். ஒரு பத்து வயதானால்தானே அந்தக்கவலை. இரண்டு பத்துக்குக் குறைவே இல்லை. அத்தகைய துணிவுடன் பெண்களை வைத்துக்கொண்டுள்ள பெண்வீட்டுக்காரர்களும் சேர்ந்து செய்யும் கல்யாணம் எந்த மாதத்தில் நடந்தால் என்ன! என்கிற தத்துவ ஞானம் பிறந்து வளர்ந்தும்விட்டது. அந்த முறையில் கார்த்திகை மாதம் ஒரு கல்யாணம் நடந்தது. பையன் லக்ஷணமாயிருப்பதோடு நல்ல படிப்பும் உயர்ந்த சம்பளம் வாங்கும் உத்யோகத்திலும் இருக்கிறானாம்.

பெண் மிகவும் பிடித்திருப்பதால் காலணா வரதக்ஷிணை வாங்காமல் மிக்க ப்ரீதியுடன் கல்யாணம் செய்துகொண்டான். இத்

தகைமை அதிசயமான மருமகன் காலணா வரதக்ஷிணை இல்லாமல் கல்யாணத்தைச் செய்துகொள்ளுவதைக் கண்ட பெண் வீட்டார் சீராகவும், நகைகளாகவும் தாம் தீர்மானித்ததைவிட அதிகமாகச் செய்து பெருமை படுவதுபோக ஏற்கெனவே போட்டிருந்த நகைகளில் சிலவற்றை எடுத்துக்கொண்டுவிட்டார்களாம். வெள்ளி, பித்தளை முதலியவைகளையும் அப்படியே அல்பத்தனமாக எடுத்துவிட்டார்களாம். இதனால் தங்கள் மதிப்பும், கண்ணியமும் எத்தனை குறைந்துவிடுகிறதென்பதைக் கவனிப்பதே இல்லை போலும். பிள்ளை வீட்டாருக்குத்தான் கொள்ளையடிப்பதில் பேராசை என்றும் எத்தனை சீர்வகைகள் சொல்லிய அளவுக்கு மேலாகச் செய்தால்கூட சிலருக்கு த்ருப்தியே இல்லாமல் குற்றமும் குறையும் சொல்லித் தன் மதிப்பைக் குலைத்துக்கொள்ளும் சுபாவம் உண்டு என்று உலகமே பட்டங்கொடுத்துவிட்டது. "மாஇண்டிகிவஸ்தே ஏமி தேஸ்த்தாவு மீஇண்டிகிவஸ்த்தே ஏமி இஸ்தாவு" நீ எங்க வீட்டிற்கு வந்தால் என்ன கொண்டு வருவாய். நான் உங்க வீட்டிற்கு வந்தால் என்ன கொடுப்பாய் என்பது தெலுங்கு பழமொழி. இந்தப் பழமொழியின் உண்மை அனேகமாய் பிள்ளைகளைப் பெற்ற மகா புண்யாத்மாக்களிடை கண்கூடாகப் பார்க்கிறோம். தங்கள் பிள்ளைக்குக் கல்யாணமாகிறபோது தாம் செய்யும் அட்டகாஸம், குற்றம் குறையையே பாடுவது முதலியவைகளைத் தாம் பெண்ணுக்குக் கல்யாணம் செய்யும்போது தன் மீதே சீறிக்கொண்டு பிள்ளைவீட்டாரிடமிருந்து வருமே என்று நினைப்பதே இல்லை. பாவம்! இன்று கறப்பதையே பார்ப்போம். நாளை நடப்பது பிறகு என்கிற வேதாந்த விஷயங்களில் தேரிவிடுவார்கள் போலிருக்கிறது. பெறப்பெற பிள்ளையாசை சேரச்சேர செம்பொன்னாசை என்பது பழமொழி. பிள்ளைகளுக்குக் கல்யாணமாகும்போது சேரச்சேர சீர்வரிசைகளின்மீது ஆசை அபாரமாகப் பெருகிவிடும்போது இது குறைவு இது மட்டம் இதைவிட பக்கத்துவீட்டில் இன்னும் அதிகம் செய்திருக்கிறார்கள். எதிர் வீட்டில் ஆயிரம் மடங்கு அதிகம் செய்திருக்கிறார்கள். இவைகளைவிட என் தம்பி நாட்டுப்பெண் இன்னும் ஏராளமாகச் செய்து கொண்டுவந்தாள். பெரிய நாட்டுப்பெண் நூறுமடங்கு அதிகம் செய்துகொண்டுவந்தாள். நாத்தனார் நாட்டுப் பெண்ணின் தட்டு ஒன்றே போதும். மைத்துனர் நாட்டுப்பெண்ணின் குத்து விளக்கு ஒன்றேபோதும் என்று பத்திரிகாசிரியர்களின் விமர்சனங்களைவிட அதிகமாகச் செய்யக் கிளம்பிவிடும்போது தங்கள் கவுரவமும் நல்ல மதிப்பும் எத்தனைக்கெத்தனை இரங்கிக் கீழ் நோக்கிப் போகிறது என்பதை கவனிப்பதே இல்லை. பெண் வீட்டார் நிறைய செய்யவில்லை என்று இவர்கள் சொல்வதுபோல் திருப்பி அவர்கள் "பெண்ணுக்கு நீங்கள் தாலியும் கூறையும் தவிர குண்டுமணி பொன்னோ! வேறு புதிய சேலையோ! வாங்கினீர்களா? இதற்குவாய்எதற்கு?" என்றுஎதிர்த்துக் கேட்டுவிட்டால் என்னவாகும். வீண் சண்டை மனஸ்தாபம் ரஸாபாஸந்தான் நேரும். என்ன விருப்பினும் பிள்ளைவீட்டார்களின் அல்பத்தனம் நாளைக்கு நாள் பரவிக்கொண்டுவருவதைத் தடுக்கவேண்டும் என்று ஒருபுறம் கூக்குரல் இருக்கையில் பெண்வீட்டார்

கல்யாணத்தில் இப்படி அல்பத்தனமாக நகைகள் பாத்திரங்கள் இவைகள் மறைத்துவிட்டதானது கேட்கவே பிடிக்கவில்லை. கல்யாணம் ஆயிற்று. பெண்ணை அவன் அழைத்துக்கொண்டு போய்விட்டான். அவ்வளவுதானே வேண்டும் என்று திருப்தியாகிவிட்டார்கள்.

தைபிறந்தபிறகு வழிபிறக்கும் என்பார்கள். அதுபோல நமது சமூகத்தின் பலவித க்ஷேமங்களுக்கும் ஒரு வழி பிறக்க வேண்டும். சந்திரக்ரகணங்களை விட சூர்யக்ரகணங்கள தான் மிகவும்சிறந்தவை என்பார்கள். இவ்வருஷம் இரண்டு க்ரகணங்கள் வந்திருப்பதால் கட்டாயம் சுபீக்ஷமும் க்ஷேமமும் உண்டாகும் என்று பெரியவர்கள் சொல்கிருர்கள். பெரியவர்களின் வார்த்தைக்கு என்றுமே அழிவில்லை. பெரியார் வார்த்தைகளுக்குமட்டுமல்ல, சகலவித பழக்க வழக்கங்களுக்கும் அழிவு இல்லை. ஆனால் அதை நம்பிக்கையுடன் பார்க்கும் புத்திதான் காலத்தினுடைய கோலத்தால் குறைந்து கொண்டு வருகிறது. இன்னொரு வேடிக்கை பாரு.

க்ரகணத்தன்று எங்கள் எதிர் வீட்டு வாசலில் ஒரு தாம்பளத்தில் ஜலத்தை வைத்து விட்டு ஒருஉலக்கையை அதில் நிற்க வைத்தார்கள். உலக்கை க்ரகணத்தின் சாமையால் காந்தம்போல் இழுக்கப்பட்டு அந்தரத்தில் அப்படியே நின்ற அதிசயத்தைக் கூட்டங்கூட்டமாக ஜனங்கள் பார்த்து ப்ரமித்தார்கள். உலக்கை கனமான வஸ்து. அது எப்படி அந்தரத்தில் நிற்க முடியும். பெரியவர்கள் இதைச் சாதாரணமாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதை அன்றுக் கண்ணூர ப்ரத்யக்ஷமாகப் பார்த்தேன். தவிர ஸினிமா பிலிம்கள் நீளமாக இருப்பதை வைத்துக்கொண்டு ஒருவர் சூரியனைப் பார்த்தார். க்ரகணம் நன்ருகத் தெரிந்ததாம். பார்த்துக்கொண்டே இருக்கையில் அந்த பிலிம் கைவிட்டு நழுவியதுபோல் தோன்றியதாம. சுற்றுமுற்றும் தேடு தேடுஎன்று தேடினூராம். காற்றில் பறந்துவிட்டதா என்று சிறிது தூரங்கூட சுற்றிவளைத்துப் பார்த்தாராம். என்ன ஆச்சரியம் கைவிட்டு நழுவிய பிலிம் அந்தரத்தில் அப்படியே நிற்பதைக் கண்டு அத்தனை ஜனங்களும் ப்ரமித்துப்போய் அதை சினிமா வேடிக்கைப் பார்ப்பதுபோல் பார்த்தார்களாம். இப்படி ஒவ்வொரு விஷயத்திற்கு ஒவ்வொரு அபரிமிதமான சக்தி இருக்கிறது என்பது பொய்யேயல்ல. அதைப்போல் பிள்ளைவீட்டாருக்கு குறைகூறும் ஒரு சக்தியும் வரதக்ஷிணை வாங்கும் ஒரு சக்தியும் ஏந்துங்கை அவர்களுடைய குலப்பெருமை, இடுங்கை இனத்திலேயே இல்லை என்று பறைசாற்றும் ஒரு சக்தியிருக்கிறது இல்லையா? "வாங்கும்கை வம்ச பரம்பரை. கொடுக்குங்கை குல கோத்திரத்திலேயே இல்லை" என்பது ஒரு பழமொழி எந்தகாலத்தில் பிறந்ததோ! தெரியாது. ஆனால் அந்தப் பழமொழிக்குச் சிரஞ்சீவி பட்டமளித்து என்றும் நிலைத்துப் புகழும்படியான சக்தி பிள்ளைவீட்டாரிடம் இருக்கிறது என்பதை உலகம் மறக்கவே மறக்காது.

உன் மாமி

# ஹரிபாலதாஸர்

"வாள்வலியால் மந்திரங் கொண்ட மங்கையர்கோன்" என்று ப்ரஸித்திபெற்ற திருமங்கை ஆழ்வாரின் சரித்திரம் போன்று மிக்க பக்தியுடன் விளங்கிய ஸ்ரீ ஹரிபாலதாஸரின் சரித்திரமும் அமைந்திருக்கிறதால் அதை இங்கு வெளியிடுகிறோம்.

மிக்க பக்தசிகாமணியாயும் தர்மதாதாவாயும் கோடி ஐச்வர்ய செல்வவந்தராயும் விளங்கிய ஹரிபாலதாஸர் வடநாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வசித்து வந்தார். எல்லாவித தானங்களைக் காட்டிலும் அன்னதானமே மிகச் சிறந்தது. என்றதனால் தாஸர் ப்ரதி தினமும் அன்னதானம் செய்வதே தமது பிறவியின் ஸார்த்தகம் என்று எண்ணிச் செய்து வந்தார்.

> கரந்தனில் தனமிருந்தால் காருண்ய சிந்தை இல்லை
> கரந்தனில் தனமற்றோர்க்கே கருணையே நிறைந்திருக்கும்
> கரந்தனில் தனமும் நல்ல காருண்ய குணமும்கூடில்
> கரந்தன்னை அடக்க அங்கோர் கர்மியும் தோன்றுவானே!

என்பதுபோல் தாஸர் தன் செல்வங்களை இப்படி அன்னதானம் செய்து கரைத்து விடுகிறாரே நமக்குக் கொடுக்கவில்லையே என்று படை எடுத்து தாஸரைத் தொந்தரவு செய்து பார்த்து விட்டார்கள். பக்திக் கனலில் ஸ்புடம் போட்ட பரிசுத்த இதயம் படைத்த தாஸர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. எத்தனை பேர்கள் வந்தாலும் தாராளமாகச் சாப்பிடுங்கள்; மற்றபடி எந்த தொந்தரவும் எனக்கு வேண்டாம் என்று கண்டிப்பாய்க் கூறி விட்டார். பக்த ஜனங்களுக்கு அன்னதானம் செய்யும் வகையில் தமது செல்வம் பூராவும் கரைந்து விட்ட பின்னரும் ததீயாராதனத்தை நிறுத்தமனமின்றி திருமங்கை மன்னன் போல் வில்லும் அம்புங்கொண்டு வழிபறி கொள்ளையைச் செய்து ஸாதுக்களுக்கு அன்னமளித்துக் கொண்டிருந்தார். ஒருதினம் வழிபறிக்க யாருமே கிடைக்காமல் மனம் தவித்துப்போய் வில்லும் கையுமாக நிற்கிறார்.

"ஸாதுக்கள் பட்டினியினால் சுருண்டு விடுவார்களே! அந்த மகாபாபத்திற்கு இலக்காகாமலிருக்க வேண்டுமே! கடவுளே! ஒருவர்கூட வரவில்லையே!" என்று ஏங்கித் தவிக்கையில் பகவானும் பிராட்டியும் வணிகர் உருவங்கொண்டு அவ்வழியே வந்தார்கள். அவர்களைக் கண்ட தாஸர் மிக்க மகிழ்ச்சியடைந்து வழிபறித்துச் சகல பொருள்களையும் கொண்டுபோய் விட்டார்.

இதைக் கண்ட தேவியார் கடகடவென்று நகைத்தவாறு "ஸ்வாமீ! வழிபறிக் கொள்ளைக்காரனா உமது பக்தன். இதென்ன அநியாயச் செய்கை" என்று ஏளனமாகக் கேட்டாள். பகவான் சற்றும் வருந்தாமல் "ப்ரியே! இந்த பக்தனின் விஷயத்தை விளக்கிக் காட்டுகிறேன். அதன் பிறகு நீ ப்ரமிப்பாய்" என்று கூறி இருவரும் ஸாதுக்கள் உருக்கொண்டு தாஸரின் வீட்டிற்கு வந்தார்கள்.

ஆயிரக்கணக்கான பரதேசிகள் வெகு ப்ரம்மானந்தமாக உட்கார்ந்துப் புசிக்கின்றார்கள். தாஸரும் அவருடைய மனைவியும்

மகிழ்ச்சியோ மயமான உருக்கொண்டு பரிந்துபரிந்து பரிமாறு கிறார்கள். அந்த கோஷ்டியில் பகவானும் பிராட்டியும் ஸாதுக் களாகக் கலந்து இந்த வைபவத்தையும் பக்தனின் பேரானந்தத் தையும், பகவான் தேவிக்குக் காட்டி, இருவரும சாப்பாட்டுராமன களாக அமர்ந்தார்கள்.

எல்லோரும் சாப்பிட்டுவிட்டுச் சென்ற பிறதும் பகவானும் தேவியுமான ஸாதுக்கள் அப்படியே உட்கார்ந்திருப்பதைக் கண்ட தாஸருக்கு இன்னதென்று விவரிக்க இயலாத ஒரு தனி உணர்ச்சியும் ஆனந்தமும் பொங்கி எழும் வேகத்தில் ஸாதுக்களை வணங்கி "என்ன வேண்டும் என்று வினயமாகக் கேட்டார்?"

பகவான் மிக்க விசனப்படுவர்போல் அபிநயித்து தாஸரே! நாங்கள் வணிகர்கள் "எங்களை யாரோ ஒருவன வழிமறித்துச் சகல சொத்துக்களையும் கொண்டுபோய்விட்டான். மனம் நொந்து தவிக்கிறோம் என்று கூறியவாறு சாதுக் கிழவரான கோலத்தை மறைத்து வணிக உருக்கொண்டு காக்ஷியளித்ததைக் கண்ட தாஸர் மெய்மறந்து "ஹா! ரக்ஷகா! தங்களிடமா! அபசாரத்தை செய்து விட்டேன" என்று கதறிக் கண்ணீர் வடித்தார். பகவான் பக்தனை ஆச்வாசப்படுத்தி "தாஸரே! இனி நீர் இத் தகையத் தொழிலைச் செய்ய வேண்டாம். ஏராளமான செல்வத்தை உமக்களிப்பதற்காகவே நாம் இம்மாதிரி செய்தோம்" என்று கூறி தமது பக்தனுக்குக் கண்குளிர தனது திவ்யஸ்வரூபத்துடன் தரிசனங்கொடுத்து அனுக்ரஹித்து மறைந்தார். தாஸர் பரம சந்தோஷத்தையடைந்து அன்று முதல் தமது கைங்கர்யத்தைச் சிறப்பாகச் செய்து பக்தியுடன் வாழ்ந்து வந்தார்.

---


## சென்னை ரேடியோவில்
## "நீலவண்ணன்"

வை. மு. கோ. நடத்தும் தொடர் இசைச் சித்திரம்.

| | | | |
|---|---|---|---|
| 3-ம் பாகம் | 3—2—56 | 1 மணி | "குறிகேட்பதும் தூதுவிடுதலும்" |
| 4-ம் பாகம் | 17—2—56 | ஷை | "கனவும்நனவும்" |

(பிப்ரவரியின், தொடர்ச்சி: மார்ச் மாதத்தில்.)

---

### வை. மு. ஸ்ரீ. நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. உதய சூரியன் | 1—4 | 6. இருளில் ஒளி | 1—4 |
| 2. மதமா, மனமா? | 1—4 | 6A. ஸ்ரீ ஸ்துதி | 0—4 |
| 3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி | 1—8 | 7. திமாகபலி | 0—12 |
| | | 8. ஜெயந்தி சிந்தனைகள் | 1—8 |
| 4. ராணி சிலாவதி | 1—0 | 9. ஸ்ரீகோதாஹ்ருதயம் | 0—12 |
| 5. பெண்மணிக் கனல் | 1—0 | 10. ஒப்பிலாநாட்கள் (அச்சில்) | |

ஒரு நிமிஷக் கதை.

# "அட ராமா"

அன்று ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் எதிர் வீட்டு மாமா ஏதோ சோர்ந்தாப்போல உள்ளுக்கும் வெளிக்குமாய் நடந்துகொண்டிருந்தார். அவர் வீட்டிலுள்ள மற்ற எல்லோரும் கவலையாய் இருக்கிறமாதிரி தெரிந்தது. அப்பொழுது அவருடைய ப்யூன் வெகு வேகமாய் சைகிளில் வந்து இறங்கினான். அவனிடம் அவசரமாய் எதையோ சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தார் மாமா.

இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு அவர்கள் வீட்டில் ஏதோ என்னமோ என்று தோன்றியது. ஒருவேளை ஜுரமாய் படுத்துக்கொண்டிருந்த கடைசிப் பையன் கிட்டுவுக்குத்தான் உடம்பு அதிகமாய்விட்டதா என சந்தேகப்பட்டேன். எதற்கும் நேரில் போய்க் கேட்கச் சிறிது தயக்கமாய் இருந்ததால் அடுத்த வீட்டு கமலா மாமியிடம் போய் "பக்கத்து வீட்டில் என்னவாயிருக்கும் மாமி" என்று கேட்டேன். "எனக்குத் தெரியாதம்மா! ஒருக்கால் பார்ட்டியாய் இருக்கலாம்" என்றார் அவர்.

ஐயோ பாவமே! பாட்டியா போய்விட்டாள் என்று வருத்தப்பட்டுக்கொண்டு, "அதுதானே நினைத்தேன்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

பிறகு யார் யாரோ அந்த வீட்டிற்கு வந்துகொண்டே இருந்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரே சிரிப்பும், பேச்சும், கொம்மாளமுமாக காதைத் துளைத்தது. இதென்னடா இது என்று வாசற்கதவைத் திறந்து பார்க்கப் போனேன். "நான் சொல்லவில்லையா, ஏதோ பார்டியாய் இருக்கும்னு" என்றார் வாசற்படியில் நின்றுகொண்டிருந்த கமலா மாமி.

அட ராமா! நான் கேட்ட அழகு இவ்வளவுதானு! ஏதோ பார்ட்டியாய் இருக்குமென்பது பாட்டியாய் இருக்குமென்றல்லவா என் காதில் விழுந்தது. நல்லகாலம்! இந்த மட்டும் என் சமர்த்தை வெளியில் காண்பித்துக்கொள்ளாமல் இருந்தேனே!

"காயத்ரி"

---

ஜகன்மோகினி: 33-ம் ஆண்டு, 1956

தனிப்பிரதி அணா 4.

வருடச் சந்தா ரூ. 3

# காளிதாஸர் கனவு

## 8. உமாப்ரஸாதம்...குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அதே சமயத்தில் சப்தமாத்ருகா தேவிகள் பரமேச்வரனுக்கு அலங்காரம் செய்ய விரும்பினார்கள். அவர்களுடைய பக்திக்கு இணங்கினாரே தவிர அவருக்கு மங்கள உருவம் இயற்கையே. சுடலைப்பொடியேச் சந்தனப்பூச்சாக மாறிற்று. கபாலமே தலைப் பாகையாயிற்று. யானைத்தோல் பட்டாடையாகிவிட்டது. நெற்றிக் கண்ணே திலகமாயிற்று. மெய்யிலிருந்த அரவங்களெல்லாம் நாக ரத்தினங்களாக ஒளிவீசின. களங்கமற்ற பிறைச்சந்திரன் தலையில் பிரகாசித்தான். சிவகணங்களாலும், எல்லாத் தேவர்களாலும் சூழப்பட்டுப் பரமேச்வரன் இடபாரூடராக நந்திகேச்வரன் கைலாக் குக் கொடுக்க மகா வைபவமாக மணக்கோலத்துடன் வந்து சேர்ந் தார். பரமேச்வரனுக்கு முன்பாகத் தேவ துந்துபி வாத்தியம் வாசித்துப் பேரொலி செய்ய மங்கள முழக்கத்துடன் அவரை அழைத்து வந்தார்கள். சூர்யன் பரமேச்வரனுக்கு வெண்குடை பிடித்தான். கங்கா தேவியும், யமுனா தேவியும் பகவானுக்குச் சாமரம் வீசினார்கள். பிரமனும், விஷ்ணுவும் "ஜயவஜயீபவ" என்று வெற்றி முழக்கம் செய்தார்கள். மும்மூர்த்திகளும் ஒரே பரம தத்துவமானபடியால் அவர்களுடைய லீலைகளில் ஒரு சமயம் ஒருவரும், மற்றொரு சமயத்தில் மற்றொருவரும் நடுநாயகமாக விளங்குவதுண்டு. அது அவர்களுடைய சுதந்திர சங்கல்பம். தேவர்கள் எல்லோரும் கைகட்டி, வாய் பொத்தி, தலை வணங்கிக் கல்யாண மகோற்சவத்தைப் பார்க்கின்றார்கள். பரமேச்வரன் பிரமனைத் தலையசைவாலும், விஷ்ணுவைப் புன்சிரிப்பாலும் மற்ற தேவர்களைக் கடாக்ஷத்தாலும் நல்வரவு கூறினார். சப்த ரிஷிகள் புரோகிதர்களாகச் செய்யவேண்டியச் சடங்குகளைச் செய்தார்கள். கந்தர்வர்கள் பாடினார்கள். அப்சர மாதர்கள் நடனமாடினார்கள்.

இப்படி ஆகாய மார்க்கமாக வந்தவர்களை எதிர்கொண் டழைத்து இமய அரசன் மணமண்டபத்திற்குச் சென்றார். நகர வீதி வழியாக ஊர்வலம் வந்தபொழுது அந்த நகரத்திலுள்ள மாதர்கள் சாளரங்கள் வழியாக ஆவலுடன் மணமகனை எட்டிப் பார்த்தார்கள். மன்மதனை வென்ற அழகுடன் வரும் பரமேச் வரனைப் பார்த்து "இந்த அழகிய மணவாளனைக் கண்டு தன்னழ கைப் பழித்து மன்மதன் ஓடி ஒளிந்துவிட்டான்" என்று அவ ருடைய அழகைப் புகழ்ந்தார்கள்.

விவாக மண்டபத்தின் அருகில் வந்தவுடன் அச்சுதன் அரனுக்குக் கைகொடுத்துக் கீழே இறக்கினார். பிறகு பரமேச் வரன் விவாக மண்டபத்தை அடைந்தார். அங்கே இரத்தின சனத்தில் அமர்ந்து இமய அரசன் அளித்த பட்டாடையை

மணிந்து அக்கினி சாட்சியாக வேத மந்திரங்களுடன் பார்வதி தேவியைப் பாணிக்கிரகணம் செய்தார். சப்தபதிலாஜ ஹோமம் முதலிய வைதிகச் சடங்குகள் நிறைவேறின. துருவ தர்சனம், அருந்ததி தர்சனம் நடந்தன. தம்பதிகள் பிரமனை வணங்கினார்கள். அவர் "வீரகுமாரன் பிறக்க வேண்டும்" என்று ஆசீர்வதித்தார். சரஸ்வதி தேவியே மங்களம் பாடினாள். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். பிறகு அவர்கள் அரனை நோக்கி மன்மதனுடைய நமஸ்காரத்தையும் ஏற்றுக்கொள்ளும்படிப் பிரார்த்திக்கப் பகவானும் இணங்கி அவனை உயிர்ப்பித்து அவனுக்கு அருள் செய்தார்.

## குமார சம்பவம்

பிறகு பார்வதி பரமேச்வரர்கள் மிகுந்த அன்புடன் தம்பதிகளாக இன்புற்றிருந்தார்கள். இப்படி நூறு ஆண்டுகள் சென்றன. குமரக் கடவுளை அடைய விரும்பிய விருப்பம் பயனடையாமல் தாமதமாவதைப் பொறுக்காமல் தேவர்கள் எல்லோரும் அக்னி தேவனைப் பரமேச்வரனிடம் அனுப்பினார்கள். அவர் புரு உருவத்துடன் தம்பதிகள் இருந்த இடத்தில் பரமேச்வரனுடைய கண்களை அழகால் கவரும் முறையில் இங்குமங்கும் பறந்தார். பரமேச்வரன் தான் யார் என்று அறிந்து சினமடைந்ததைக் கண்டு பயந்து, அவர் "ஈசனே! தேவர்கள் உங்கள் பிரசாதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். கிருபை கூர்ந்து குமரக் கடவுளை எங்களுக்குப் படைத் தலைவனாக அளிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார். ஈசனுமிணங்கித் தன் தேஜோமயமான அம்சத்தை அவரிடம் கொடுக்க அவர் அதை எடுத்துச் சென்றார். ஆனால் அவரால் அந்த தேஜஸைத் தாங்க முடியவில்லை. இதைக் கண்டு இந்திரன் அக்கினி தேவனை அந்த தேஜஸைக் கங்கா நதியில் விடும்படி உபதேசித்தார். அக்கினி தேவனும் அப்படியே செய்து கங்கையில் மூழ்கி தன்னுடைய தாபத்தைப் போக்கிக்கொண்டார்.

இப்படிக் கூறும்பொழுது காளிதாஸர் கங்காதேவியை நினைத்ததால் மிகுந்த ஆனந்தமடைந்து என்னிடம் வெகு அழகிய தன்னுடைய கங்கை துதியைக் கூறினார். "குமாரதாசா! உனக்குக் கங்கையின் பெருமையை நான் எப்படி உணர்ந்திருக்கிறேன் என்று பூர்ணமாகத் தெரியாது. கங்கை ஹிமவான் நமக்கு அளித்த ஒப்பற்ற அழிவற்ற செல்வம். அவளைக் கண்டாலே மனங்களிக்கும், கலை வளரும், முக்தி நம்மை நாடிவரும். கடவுள் தர்சனமளித்துப் பிரசன்னராவர். நான் அடிக்கடி வான்மீகி ராமாயணத்திலுள்ள கங்கை துதியைக் கூறுவதை நீ கேட்டிருக்கின்றாயே! அதை நன்கு கவனிக்க வேணும்.

"அங்கே மூவுலகங்களுக்கும் செல்லும் பாபமற்ற புண்ணியமான திவ்யமான நீருடன் ஓடும் கங்கையை ராமன் கண்டான். ரிஷிகளால் சேவிக்கப்பட்டவள். தண்ணீர் வேகமாக ஓடி மோதிக் கொள்வதால் ஏற்பட்ட அட்டஹாஸத்துடன் போகப்பட்டவள். வெளுத்த நுரையால் புன்முறுவலுள்ளவள் போல் விளங்குகிறாள். சில இடங்களில் பெண்களுடைய தலை கேசத்தின் பின்னலைப் போல் தோன்றுகிறாள். சில இடங்களில் பெருஞ்சுழிகளுடன்

ஓடுகிருள். சில இடங்களில் அசைவற்றுச் செல்லுகிருள். சில இடங்களில் பயங்கர வேகம். சில இடங்களில் கொஞ்சும் ஒலி. சில இடங்களில் இடிபோன்ற ஒலி. வெகு இரத்தினங்களிழைத்த தங்க நகைகளுடன் விளங்கும் பெண்மணிபோல் விளங்கிக் குலுங்கிச் செல்கிருள். விஷ்ணு திருவடியிலிருந்து வந்தவள். பாவமற்றவள். பாவத்தை ஒழிப்பவள். சிவனுடைய சடையி லிருந்து குதித்து வந்தவள். கங்கை சமுத்திர அரசனுடைய பட்ட மஹிஷி''

தத்ரரத்ரியதகாம் திவ்யாம் சிவதோயா மனசைவலாம் |
ததர்ச ராகவோ கங்காம் புண்யாம் ரிஷிநிஷே விதாம் ||
ஜலகாதாட்டஹா ஸோக்ராம் பேனநிர்மல ஹாஸினீம் |
க்வசித் வேணீக்ருதஜலாம் க்வசிதாவர்த சோபிதாம் ||
க்வசித் ஸ்திமித கம்பீராம் க்வசித்வேக ஜலாகுலாம் |
க்வசித் கம்பீர நிர்கோஷாம் க்வசித பைரவ நிஸ்வனாம் ||
ப்ரமதாமிவ யத்னேன பூஷிதாம் பூஷணோத்தமை: |
விஷ்ணு பாதச்யுதாம் திவ்யாம் அபாபாம் பாபநாசினீம் ||
தாம்சங்கர ஜடாஜூடாத் ப்ரஷ்டாம்ஸாகர தேஜஸா |
ஸமுத்ர மஹிஷீம் கங்காம் ஸாரஸ க்ரௌஞ்ச நாதிதாம் ||

(அயோத்யா காண்டம் சர்க்கம் 50.)

இந்த அழகிய சுலோகங்களை மனங் களித்துக் களித்துக் கூறிக் கொண்டிருந்தபொழுது திடீரென்று மின்னல்போல் என் மனதில் ஒளிவீசின சுலோகங்களை என் குமார சம்பவ காவ்யத்தில் அமைத் தேன்.

''கங்கை ஸ்வர்க்கம் ஏறுவதற்கு ஏணி. மோக்ஷ மார்க்கத் திற்குத் தேவதை. பெரிய பாவங்களைப் போக்கும் வல்லமை யுள்ளவள். ஸம்ஸாரத்திலிருந்து நமக்கு விடுதலையளிப்பவள். சிவனுடைய சடையில் இருப்பவள். ஆசைகளில் ஆழ்ந்தவனுக் குக்கூட முக்தியளிப்பவள். யாவரையும் தர்மமூர்த்திகளாக மாற்றி விடுவள். விஷ்ணு லோகத்தில் பிறந்தவள். பிரம்ம லோகத்தி லிருந்து வந்தவள். தன் மூன்று பிரவாகங்களால் மூன்று உலகங் களையும் புனிதமாக்கியவள். சுபத்தை அளிக்கும் சிரமத்தைப் போக்கும் புண்ணியத்தைக் கொடுக்கும் முக்தியை அடைவிக்கும் கங்கையில் அக்கினி தேவன் மூழ்கி அளவற்ற இன்பத்தை அனுபவித்தார்.

ஸ்வர்காரோஹண நிச்ரேணி: மோக்ஷமார்காதி தேவதா |
உதார துரிதோத்கார ஹாரிணீ துர்கதாரிணீ ||
மகேச்வர ஜடாஜூட வாஸினீ பாபநாசினீ |
ஸராகான்வய நிர்வாணகாரிணீ தர்மதாரிணீ ||
விஷ்ணுபா தோதகோத்பூதா ப்ரஹ்மலோகா துபாகதா |
த்ரிபி:ஸ்ரோதோ பிரச்ராந்தம் புனை புவனத்ரயம் ||
கங்காவாரிணி கல்யான காரிணி [illegible] |
மைக்ஞே நிர்விருதிம் ப்ரா[illegible]பாரிணி தாரிணீ

(தொடரும்)

183199

# கிருஹலக்ஷ்மீ

(கன்னட நாவல் சுருக்கம்)

*மூல எழுத்தாளர்:* **ஸ்ரீமான் அ. நா. கிருஷ்ணராவ்.**
*மொழிபெயர்ப்பாளர்:* **ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.**

## அத்தியாயம் 1.

மைசூர் சமஸ்தானத்தில், பெங்களூரின் சமீபமுள்ள புட்டசோமனஹள்ளியில் மிராசுதார் வெங்கடராவ் கலியுகக் கர்ணன் என்று பிரக்யாதி அடைந்திருந்தார். நூற்றுக்கணக்கான பேர் வெங்கடராயர் வீட்டில் உண்டு தின்று பிழைத்தனர். கணவன் ஊதாரி என்றால் மனைவி கருமியாக இருப்பது வழக்கம். ஆனால், வெங்கடராவும், அவருடைய மனைவி ரங்கம்மாளும் அதற்கு விதிவிலக்காக இருந்தனர். புட்டசோமனஹள்ளி மாத்திரமின்றி, அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள கிராமங்களிலும், சமீபத்திலுள்ள பெங்களூர், கோலார் ஜில்லாக்களிலும் ராயரின் தாராளமனப்பான்மை பிரசித்தமாக இருந்தது. அவருடைய தாராளத் தன்மையைப் பயன்படுத்திக்கொள்ளாதவர்கள் சுற்றுப்புறத்திலுள்ள கிராமத்தினர்களில் வெகு அபூர்வம்.

வைதீகர்கள், ஹரிகதா பாகவதர்கள், சாஸ்திரம் சொல்பவர்கள், வைத்தியர்கள், வித்வான்கள் முதலியோர் ராயரின் வீட்டில் மாதக்கணக்காகத் தங்குவார்கள். உதாரகுணம், தெய்வபக்தி இரண்டும் சரிசமனாகக் கலந்து ராயரின் வீட்டைத் 'தர்மசத்திர'மாக்கிவிட்டன.

ராயர் பெரிய மிராசுதார்தான். கூடவே கண்ட்ராக்ட் வேலையும் செய்து வந்தார். சுற்றுப்புறத்திலுள்ள ஏரிகளின் கண்ட்ராக்ட் வேலையெல்லாம் ராயரின் பங்குக்கு விழுந்தது. கண்ட்ராக்டில் அநியாய சம்பாத்தியத்துக்கு ராயரின் மனம் செல்லவில்லையாதலால் ஜனங்களிடத்தில் பெரும் மதிப்பைப் பெற்றார். அவர் வெறும் கையில் வாழ்க்கையைத் துவக்கினாலும், அவருடைய தற்பொழுதிய செல்வாக்குக்குக் காரணம் தெய்வ பலம் இருந்ததென்று தாராளமாகச் சொல்லலாம். அவர் வீடு கட்டும்பொழுது இரண்டு கொப்பரை நிறைய பொன் கிடைத்ததென்று ஜனங்கள் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் பொன்னை ராயர் கொப்பரைகளில் காணவில்லை—மனித இதயத்தில்தான் கண்டார்.

ராயருக்கு வாழையடி வாழையாக என்ன வந்தது என்றால் வைத்திய வித்தைதான். வெங்கடராயர் தன் வாழ்க்கைத் தொழிலாக வைத்திய வித்தையைக் கையாளவேண்டி இருக்கவில்லை. ஆனால் வம்ச பாரம்பரியமாக வந்த கல்வியைக் கைவிடக்கூடாதென்றதொரு மதிப்பு, அதனுடன்கூட பத்து பெயருக்கு உபகாரம் செய்யலாம் என்ற நோக்கத்தால் அவர் வைத்தியம் செய்து வந்தார். ஆனால் யாரிடமும் கைமாறாக ஒரு தம்பிடிகூட வாங்க மாட்டார். பத்து பெயருக்குப் பயனளிக்கும் இந்தக் கல்வி தம்முடன் அழிந்துபோகக் கூடாதென்று தமது மனைவிக்கும் வைத்

தியம் சொல்லிக்கொடுத்திருந்தார். தம்பதிகள் இருவரும் மக்கள் சேவையை களங்கமற்ற உள்ளத்துடன் செய்து வந்தனர்.

ராயருக்கு ஒரு குறைவும் இல்லாவிட்டாலும் மனதுக்கு அமைதி இருக்கவில்லை. அவருடைய மூத்த பையன் ஹைஸ்கூல் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு கெட்ட சகவாசங்களுடன் சேர்ந்து கெட்டுக் குட்டிச்சுவரானன். திடீர் திடீரென்று வீட்டில் விலையுயர்ந்த பண்டங்களும், பணமும் மாயமாகிவிடும். இளையவன் ஸ்ரீனிவாசனவது வீட்டுக்கு திக்காக இருக்கட்டும் என்று அவனை ராயர் தன்னுடன் கூடவே அழைத்துச் செல்வார்.

அவனுக்கு அடுத்தபடி புதல்வி ருக்மிணி. அவள் ராயருக்கு அருமந்த புதல்வி. அவளுக்கு எவ்வளவு புத்தாடைகள் தைத்தாலும் போதாது. எவ்வளவு நகைகள் செய்து பூட்டினாலும் போதாது. ராயராகவே சொல்லிக் கொடுத்த சுவாமிப் பாடல்களை ருக்மிணி பாடினால் அவருக்கு அளவுகடந்த மகிழ்ச்சி.

ராயரின் ஆச்ரிதர்களில் ஒருவரான பாகவதர் சேஷாசார் ருக்மிணிக்கு ராமாயணம், பாரதம், பாகவதம் எல்லாம் படிப்பித்திருந்தார். சேஷாசாரின் வெகு நாளைய விருப்பத்தை நடத்திக் கொடுத்தவரும் ராயர்தான். அவர் காசி, ராமேசுவரம், ஹரித்வாரம், கயா முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு க்ஷேத்திராடனம் போய் வருவதற்குச் சகல உதவிகளும் செய்த புண்ணியவான் வெங்கடராயர். ஆசார்யர் க்ஷேத்திராடனம் முடித்துக்கொண்டு ஊர் வருவதற்குள் ராயர் பரலோகஞ் சென்றுர்.

❋

"எப்போ வந்தயள் ஆசார்யரே?"

"நேற்று இரவு பெங்களூருக்கு வந்தேன்மா. இப்பொழுது தான் இங்கே வந்தேன்."

"யாத்திரையைச் சரிவர முடித்துக்கொண்டயளா?"

"திவ்யமாக. கேட்பானேன்? காசி, ராமேசுவரம், ஹரித்வாரம், கயா எல்லாம் பார்த்துவர அனுகூலம் செய்துகொடுத்து ராயரும் நீங்களும் புண்ணியம் கட்டிக்கொண்டயள்."

ராயரின் பெயரைச் செவியுற்றதும் ரங்கம்மாளின் கண்களில் கண்ணீர் சுரந்தது. ஆசாரியரின் உள்ளமும் வருத்தமுற்றது.

"வருஷமாகிவிட்டதா?"

"வருஷத்துக்குமேல் ஆறு மாதமாகிவிட்டது ஆசார்யரே."

"அனந்தன், ஸ்ரீனிவாசமூர்த்தி...யாரையும் காணுமே."

"ஐயோ! அது ஒரு பெரிய கதை. சாப்பாடானதும் நிதானமாகச் சொல்கிறேன்" என்று எழுந்தாள் ரங்கம்மாள்.

"இப்போ, எனக்காக மறுபடியும் சமைக்க வேண்டுமோ என்னவோ?"

"இல்லை. எல்லாம் இருக்கு. சாதம் ஒன்று வடித்தால் போதும்" என்று எழுந்து உள்ளே சென்றுள்.

ரங்கம்மாளின் கழுத்திலும், கைகளிலும் இருந்த நகைநட்டுகள் எல்லாம் மாயமாகிவிட்டிருந்தது ஆசாரியரின் சூக்ஷ்ம கண்களுக்குத் தென்படாமல் இல்லை.

ஆசாரியர் வீடு முழுவதும் கண்ணை ஓட்டினர். வீடு விறிச்சோடியது. எப்பொழுதும் கலகலவென்று இருந்த வீடு பாழடைந்தமாதிரி இருந்தது. அது ராயர் இல்லாத வீடு என்று

யாரும் சொல்ல வேண்டி இருக்கவில்லை. வீட்டின் ஒவ்வொரு மூலேயும் அந்தக் குடும்பத்தில் நடந்தத் துயரச் சம்பவத்தைக் கதை சொல்லிற்று.

ஆசாரியாரின் நினைவு கடந்த சம்பவங்களை நினைந்து ராயரின் வாழ்க்கைச் சரித்திரத்தை எதிரில் காட்டிற்று. அடுத்த அகத்துக்கு விளையாடப் போயிருந்த ராமு "அம்மா" என்று அழைத்த வண்ணம் உள்ளே வந்தான். கூடத்தில் உட்கார்ந்திருந்த ஆசாரியரை குதூகலத்துடன் பார்த்துவிட்டு, சமையலறைக்குள் சென்றான். ராமுவைப் பார்த்த ஆசாரியாரின் உள்ளம் கொந்தளித்தது. பெருமூச்செரிந்தவராய் "ஸ்ரீ ஹரி—ஸ்ரீ ஹரி" என்றார்.

ராயரின் பேச்சு, வார்த்தை, நடத்தை, எளிய வாழ்க்கை... அனைத்தும் ஆசாரியாரின் நினைவுக்கு வந்தன. அவருடைய கண்களில் கண்ணீர் தேங்கிற்று.

"சுவாமிக்குப் பூஜை பண்ணவில்லையா ஆசார்யரே?" என்று ருக்மிணி கேட்டாள். அவருடைய காதில் விழவில்லை. ருக்மிணி மறுபடியும் அவருக்கு நினைவு மூட்டினாள். அவர் எழுந்து போய் ஸ்நானம் செய்துவிட்டு சுவாமிக்குப் பூஜை செய்ய உட்கார்ந்தார். தங்கம், வெள்ளி விக்கிரகங்கள் எல்லாம் மாயமாகிவிட்டிருந்தன. ராயரின் வீட்டு சுவாமிக்கும் ஏழ்மை.

பூஜையை முடித்துவிட்டு, தான் கொண்டுவந்திருந்த கங்கை சொம்பு, துளசிமணிமாலை, சந்தனம் எல்லாவற்றையும் சுவாமியின் முன்னால் வைத்து மங்கள ஆரத்தி செய்து, எல்லோருக்கும் தீர்த்தம் கொடுத்தார். ரங்கம்மாள் தாம்பூலத்தில் இரண்டு ரூபாய் தக்ஷிணை வைத்து, ஆசாரியருக்குக் கொடுத்து நமஸ்கரித்தாள். ருக்மிணியும், ராமுவும்கூட நமஸ்காரம் செய்தார்கள்.

பெரிய நுனி வாழை இலை போட்டு, விதம்விதமாகப் பரிமாறி இருந்தது. ஆச்சாரியார் சந்தோஷமாகச் சாப்பிட்டுவிட்டு வந்து, கூடத்தில் போட்டிருந்த பாயில் படுத்துக்கொண்டார். பத்து நிமிஷத்திற்குள்ளாகவே குறட்டைவிட ஆரம்பித்துவிட்டார்.

அவர் விழித்துக்கொண்டபொழுது மாலை நாலு மணி. ரங்கம்மாளின் வைத்தியப்பணி வாசல் திண்ணையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வியாதியஸ்தர்களுக்கும் மருந்து கொடுத்து, பத்தியம் சொல்லி அனுப்பிவிட்டு, ரங்கம்மாள் வீட்டினுள் வரும் வேளைக்கு ஆறு மணி அடித்துவிடும்.

"எல்லாம் எப்பொழுதும் போலவே நடக்கிறது" என்றார் சேஷாசார்.

"எதுவும் நிற்காது ஆச்சாரியரே—எல்லாம் நடக்கிறது. ஆனால், விளக்கு அணைந்துவிட்டது" என்றபடி, கூடத்தின் ஓரத்தில் இருந்த அலமாரியில் அடுக்கி வைத்திருந்த ராந்தலகளை எடுத்து, ஏற்றி வைத்துவிட்டு, சுவரில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்தாள் ரங்கம்மாள். விளையாடிவிட்டு வந்த ருக்மிணி தாயாரின் அருகில் அமர்ந்தாள்.

"இருட்டிவிட்டது. ராமுவை உள்ளே கூப்பிடுமா."

"எங்கே இருக்கிறான்?'

"சாமா பட்டர் வீட்டில் விளையாடிக்கொண்டிருக்கிறான்."

சேஷாசார் மெலிந்த குரலில் "நான் யாத்திரைக்குக் கிளம்பின பொழுது நந்தகோகுலம்போல் இருந்த வீடு எப்படி விறிச்சோடி விட்டது அம்மா. ராயருக்கு என்னமா இருந்தது?"

சோமனஹள்ளியின் ஏரியின் கண்ட்ராக்ட் வகித்துக்கொண்டிருந்தார், ஆசாரியரே. பெரிய கண்ட்ராக்ட். சுமார் இருபதினாயிரம் ரூபாய் பெறுமானது. இராப்பகலாக அதே வேலை. அதே கவலை. வெய்யலில் வற்றலாக உலர்ந்து, க்ஷீணித்துப் போனார். ஒருநாள் வீட்டுக்கு வந்தவர் "என்னவோ, இருண்டு வருகிறதே" என்று படுத்தார். கொஞ்சம் ஜுரம் காய்ந்தது. இருபது நாள் ஒரே மாதிரி ஜுரம் காய்ந்தது. அவரும் வைத்தியர்—நானும் வைத்தியர். இருவருக்கும் இன்ன ஜுரம் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. என் புத்தியை எல்லாம் செலவழித்து, மருந்து கொடுத்துப் பணிவிடைகள் செய்தேன். எதுவும் பயன் அளிக்க வில்லை. இந்த ஏரியின் கண்ட்ராக்ட் முடியவில்லை என்பதுதான் அவருக்குப் பெரிய குறை."

"அனந்தன் ஊரில் இருந்தானா?"

"இல்லை. செய்தி தெரிந்ததும் வந்தான். அவன் வரும் வேளைக்கு எல்லாம் முடிந்துவிட்டிருந்தது. ஈமசடங்குகள் முடிந்த பிறகு எல்லா ஜவாப்தாரிகளையும் ஏற்றுக்கொண்டான். என் துக்கத்தில், நான் எதையும் கவனிக்கவில்லை. என்ன செய்தானோ, என்னவோ. ஒரே வருஷத்தில் கையிலிருந்த பணம் முழுவதும் கரைந்து போய்விட்டது. மயிலை ராசி மாடுகள், காணிகள்... எல்லாம் போய்விட்டன. அனந்தன்மீது வாரண்டும் வந்தது. அந்த வேளைக்குத் தலைமறைவாக ஓடிப்போய்விட்டான். அவன் போன பத்து—பதினைந்து நாட்களுக்குள் ஸ்ரீனிவாசன் என் நகை நட்டுகளை எல்லாம் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். எனக்குப் பைத்தியம் பிடிப்பது ஒன்றுதான் பாக்கி. சீரும் சிறப்புமாக வாழ்ந்த ஊரில் எங்கள் மானம்—மரியாதையெல்லாம் தம்பிடிக் காசுக்கும் கேடாயிற்று. 'கிணற்றில் விழுந்துவிட்டால் என்ன' வென்று தோன்றிற்று. ஆனால், இந்த இரண்டு குழந்தைகளின் கதி? எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. (நாத்தனாரின் அகத்துக்காரர்) அத்திம்பேர் லக்ஷ்மணராவை வரவழைத்தேன். அவர் தைரியம் சொல்லி, பத்திரங்கள் அனைத்தையும் பார்வையிட்டார். அனந்தனின் கடன்காரர்களையெல்லாம் பார்த்துவிட்டு வந்தார். மொத்தம்பன்னிரண்டாயிரத்துக்குக்கடன்பாக்கி. குளத்தங்கரைத் தோட்டத்தை விற்றுக் கடன் தீர்த்தார். லக்ஷ்மணராவை இந்தக் குளிர்ந்த வேளையில் நினைத்துக்கொள்ள வேண்டும்... மகராஜன்."

"அனந்தனும், ஸ்ரீனிவாசனும் எங்கே போனார்கள்மா?"

"ரங்கூனுக்குப் போனார்கள் என்று சமாசாரம்"

"நல்ல தாய் தந்தையர்கள் வயிற்றில் எப்பேர்ப்பட்ட குழந்தைகள்! இது பூர்வ ஜன்மத்தில் செய்த கர்மம் என்றுதான் சமாதானம் செய்துகொள்ள வேண்டும் அம்மா. நீங்களும், யஜமானரும் ஒருவருக்கும் கெடுதல் எண்ணியது கிடையாது. ஒரு கெட்ட பேச்சு பேசினதுமில்லை. ஆயிரம்—பதினாயிரம்பெயர்களுக்கு அன்னமிட்டவள். நூற்றுக்கணக்கானகுடும்பங்களைக்காப்பாற்றிஉத்தாரம் செய்தவள். தேஹி என்று உங்களிடம் வந்தவர்கள்யாரும் வெறும் கையுடன் போனதில்லை. உமக்கு இந்தக் கஷ்டம்வரவேண்டுமா."

"என் கஷ்டத்தைப்பற்றி நான்யோசிப்பதில்லை ஆச்சாரியரே. அவர்—மகாராஜர் இருக்கும்வரைக்கும் ராணிபோல் இருந்தேன். ஒரு நாளாவது என் கையைத் தடுக்கவில்லை. லக்ஷ்மி சஞ்சலை என்பதை அறிவேன். இந்த இரு குழந்தைகளுக்கும் ஒருவழியாகி, நான் நிம்மதியுடன் உயிர்விட வேண்டும்.

"குழந்தைகளைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? நீங்களும், யஜமானரும் செய்துள்ள தர்மமும், புண்ணிய காரியமும் வீண் போகாது."

"ருக்குவின் கையைப் பாருங்கள் ஆசாரியரே. அவளுக்குக் கலியாணத்துக்கு எப்போ குருபலம் கூடி வருகிறது?"

சேஷாசார் "இப்படி வாம்மா குழந்தை" என்று ருக்மிணியை அழைத்தார். ருக்மிணி எழுந்து வந்து ஆச்சாரியரின் எதிரில் அமர்ந்தாள். ரங்கம்மாள் அவர்கள் சமீபம் ராந்தலை வைத்து விட்டு, கொஞ்சம் எட்டினாற்போல் உட்கார்ந்தாள்.

ஆச்சார் ருக்மிணியின் கையைப் பார்த்தபடியே "தாயே, உங்கள் கையைக் காண்பியுங்கள்" என்றார். ரங்கம்மாள் இடது கையை நீட்டினாள். ரங்கம்மாளின் கையையும், ருக்மிணியின் கையையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.

"இங்கே பாருங்கள்—எவ்வளவு விசித்திரமாக இருக்கு!"

"என்னது விசித்திரம்?"

"இரண்டு கைகளும் ஒரேமாதிரி இருக்கு."

"என் கஷ்டம்......"

"அதொன்றுமில்லை, பயப்பட வேண்டாம். நல்ல புண்ணிய சாலியாக இருப்பாள் நம் ருக்கு. நல்ல அகமுடையானின் கையைப் பிடிப்பாள். கணவனும் மனைவியும் அன்யோன்யமாக இருப்பார்கள். பொன், பூமி, வாஹனம்......யோகமுண்டு. உங்களைப் போலவே ருக்மிணியும் ஆயிரம்-பதினாயிரம் பெயர்களுக்கு அன்ன மிடுவாள். ருக்மிணியின் புண்ணியவசத்தால் அவள் கணவன் பெயரும், புகழும் பெறுவான்.

ரங்கம்மாள் அபரிமித ஆனந்தமடைந்தாள்.

"கலியாண யோகம் எப்படி இருக்கு பாருங்கள்."

"அடுத்த யுகாதிக்குள் கலியாணம் ஆகிவிடும்மா!"

"வரன் யார்?"

"உங்கள் உறவில் யாரையாவது பார்த்திருக்கிறீரா?"

"ஹெட்-குமாஸ்தா ஐயராவின் பையன்மீது அவர் கண் வைத்திருந்தார்."

"ஏன் கூடாது? ஐயராவ் எனக்கும் நன்றாகத் தெரியும். நீங்கள் ஒத்துக்கொண்டால் அவரிடம் போய் இதுபற்றி ப்ரஸ்தாபிக்கிறேன்."

"அப்படியே செய்யுங்கள். லக்ஷ்மணராவையும் கூட அழைத்துக்கொண்டு போவது நல்லது."

"அட்டாயம் அப்படியே செய்கிறேன். நாளைக்கே கிளம்பட்டுமா ருக்மிணியின் ஜாதகம் இருக்கா?"

"இருக்கு. கொடுக்கிறேன். கலியாணம் இங்கேயே நடக்கட்டும். இரண்டு செலவையும் நானே வகித்துக்கொள்கிறேன் என்று தெரிவியுங்கள்."

"அதிக சிலவை ஏன் சுமந்துகொள்கிறீர்மா. காலம் ரொம்ப நாஜுக்காக இருக்கு."

"ஆசாரியரே—அவர் இருந்திருந்தால் பெண்ணின் கலியாணத்தை வைபவமாக நடத்தி இருப்பார். இப்பொழுது நான் வேண்டா—வெறுப்பாகச்செய்தால், அவருடைய ஆத்மா சாந்தி பெறுமா?"

"மன்னிக்க வேண்டும் தாயே. நீங்கள் சொன்னபடி செய்கிறேன்."

மறுநாள் விடியற்காலையில் துயிலெழுந்து ஸ்நானம், ஜபம், பூஜை எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு சேஷா சார்ஹருக்குக் கிளம்பச் சித்தமானார். அவருக்கு ஏதோ நினைவு வந்தது. ருக்மிணியைக் கூப்பிட்டு, தம் பையிலிருந்து எதையோ எடுத்து "ருக்கு,கண்ணை மூடிக்கோ" என்றார். ருக்மிணி அவர் சொன்னபடி செய்தாள். அவளுடைய கையில்ஏதோ ஒரு வஸ்துவைவைத்து,

"கண்ணைத் திறந்து பார்!" என்றார்.

"கிருஷ்ணன்!—கிருஷ்ணன்!!" என்றாள்.

அவளுக்கு அளவுகடந்த ஆனந்தம். ஓடிப்போய், தாயாருக்குத் தன் கையிலிருந்த விக்கிரகத்தைக் காண்பித்து, "ஸ்ரீகிருஷ்ண விக்கிரகம்—ஆச்சரரியர் கொடுத்தார்" என்றாள்.

ரங்கம்மாளின் உள்ளத்தில் நன்றி நிறைந்து தளும்பிற்று. ராயர் இருந்திருந்தால் பெண்ணுக்குப் பொன்னில் ஸ்ரீகிருஷ்ண விக்கிரஹம் செய்துகொடுத்திருப்பார். நான் ஒரு வெங்கல விக்கிரஹம் கொடுத்ததற்கு இந்தம்மாள் எவ்வளவு சந்தோஷமடைந்தாள்!" என்று சேஷாச்சார் எண்ணிக்கொண்டார்.

ரங்கம்மாள் ஆச்சாரின் சிலவுக்குப் பணம் கொடுத்து 'சிக்கராயனபுரத்துக்குக் கிளம்பும் பஸ்ஸில் அனுப்பி வைத்தாள்.

(தொடரும்)

# அறிவுப் போட்டி நெ. 5.

ஒரு வ்யாதியஸ்தனுக்கு வேண்டிய அதிமுக்யமான 5 விஷயங்கள் கீழே உள்ள 4 வரிகளில் மறைந்திருக்கின்றன. அவைகளை வரிக்கு ஒரு அக்ஷரம் விதம் கண்டுபிடித்து கூப்பனிலேயே கோடிட்டு எழுதுவதோடு தனிக் காகிதத்திலும் விவரமாக எழுதி பெயர் விலாஸத்துடன் 25 தேதிக்குள் அனுப்பவும். சரியான விடை அடுத்த இதழில். —ஆசிரியை.

1. மாநிலம் புகழும் இணை இலா ஆசானே
2. வாழ்க்கைத்திறம்பட ஒளிமின்ன வகுப்பான்
3. மங்களத்திருநாள் புனிதப் பெருநாள்
4. யாத்திரை செய்வோர்க்கு இசை துணைபுரியும்

# வெடி குண்டு

கல்யாணியம்மாளுக்கு ஏதோ பெரிய சாம்ராஜ்யத்தையே தனக்கு முடிசூட்டி விட்டது போன்ற பெருமை அபாரமாகப் பொங்குகிறது. காரணம் தன் மகனுக்குக் கல்யாணமாகி மருமகளை முதல்முதல் அழைத்து வந்திருக்கிறாள். கல்யாணம் விசாரிக்க வருகிறவர்களுக்குச் சீர்வகைகளையும் மருமகளையும் காட்டிக் காட்டிப் பேசி மகிழ்வதில் மட்டும் பூர்த்தியான இன்பத்தை அடைந்து விடவில்லை. தான் மாமியார் என்கிற ஸிம்மாஸனத்தில் ஏறி உட்கார்ந்தாகி விட்டது. இனிமேல் நாட்டுப் பெண்ணை பழைய காலத்திய சில மாமியார்களைப் போல படுத்துவதா! அல்லது புதுமையான மாமியாராக இருப்பதா! என்கிற ஒரு குழப்பம் வந்து விட்டது. அதைப் பற்றியே யோசிப்பதில் பூராபொழுதும் கழியலாயிற்று. மாமியார் எப்படி எப்படி எல்லாம் படுத்த வேண்டும்...அல்லது எப்படி நல்ல முறையில் அன்பாக இருக்க வேண்டும். சமையல் வேலை இனி அவளுடையதா! என்னுடையதா! அம்மா? மைதிலி என்று கூப்பிடுவதா! வாம்மா! என்று கூப்பிடுவதா!...அல்லது ஏ! மைதிலீ! இங்கே வா!...என்று அதிகார த்வனியில் கூப்பிடுவதா!...இந்த வேலையையும் நானே செய்கிறேன், அந்த வேலையையும் நானே செய்கிறேன். நீ பேசாமலிரம்மா...என்று சொல்லிவிட்டு நானே செய்வதா! அல்லது கண் பார்த்தால் கை செய்யவேண்டாமா! இந்த வேலை கிடப்பது உனக்குத் தெரியவில்லையா! என்று அதிகாரமாகச் சொல்வதா!...என்ற குழப்பம் வந்துவிட்டது தவிர மருமகளை நன்றாகப் படுத்துகிற மாமியாரிடம் நேரில் பழகியது மில்லை. கல்யாணி வீட்டிற்கு வருவதற்குள்ளேயே மாமியார் போய்விட்டதாலும் தான் நேராக எந்த அனுபவமும் பட்டதில்லை. அவள் தாயாரோ! நிறைய சீர் சிறப்புடன் வந்துள்ள நாட்டுப் பெண்ணைக் கண்ணாக வைத்துக்கொண்டாடுகிறாள். படிப்புக் குறைவாயுள்ள பிள்ளைக்கு மட்டமாய்வந்துள்ள நாட்டுப் பெண்ணை படுமோசமாய் நடத்துகிறாள். இதையும் சரியானபடி முழுதும் பார்த்தறியப் போவதில்லை; ஆகையால் எந்தவிதம் செய்தால் நல்லது என்று யோசித்துக்கொண்டிருக்கையில் இவள் கணவர் அங்குவந்து, "என்ன கல்யாணி! அப்போது முதல் ஏதோ கோட்டையைப் பிடிப்பதுபோல் யோசனை செய்கிறாயே! என்ன சமாச்சாரம்" என்றார்.

கல்யாணியும் தான் குழம்பும் விஷயத்தைச் சொல்லி யோசனை கேட்டாள். அவர் பலமாகச் சிரித்துக்கொண்டே; "பேஷ்! இதற்காகவா குழம்பிப்போவது. இதோ பார் கல்யாணி! வாரச் சாப்பாட்டுப் பிள்ளைகளைப்போல ஒருவாரம் நல்ல மாமியாராக இரு. ஒருவாரம் அதற்கு நேர் எதிராக இரு; உன்னிஷ்டம் இரண்டும் பூர்த்தியாகிவிடுகிறது. இவ்வளவுதானே!" என்றார். கல்யாணிக்கு அது மிக உசிதமாகத் தோன்றி ஒரு தெம்பு உண்டாகியது. அதே சமயம் இவர்கள் இருவருமே எதிர்பாராதவிதம் கல்யாணப்பிள்ளையும் பெண்ணும் அங்குவந்து

# துப்பறியும் வீர சிங்கம் ராஜாராம் நாயுடு

**வை. மு. கோ. 112-வது நாவல்**

ஜம்புலிங்கத்தைப் பற்றி முதலில் சொல்லுங்கள் டாக்டர்! இல்லாவிட்டால் நான் இப்போது தத்தித் தடுமாறியாவது அங்கு ஓடிவிடுவேன் என்று சொல்லியவாறு எழுந்திருக்க முயன்ற ராஜாவை டாக்டர் தடுத்து அமரச் செய்து...."ராஜா! நீ கண்டு பிடித்த மனிதனால் விபரீதம் நேர்ந்ததோ அல்லது வேறு யாரால் நேர்ந்ததோ? தெரியவில்லை. ஜம்புலிங்கத்தையும், நீ அனுப்பிய பழைய கைதியையும் காணவில்லை. ஏதோ ஒரு நெடி த்ராவகம் மயக்க மருந்து உபயோகித்துச் சிலரை மயக்கமாக்கிக் கிடப்பதும் தெரிகிறது. போலீஸுக்குத் தகவல் கொடுத்துவிட்டு உன்னிடமும் தெரிவித்துவிட்டுப் போக வந்தேன். டெலிபோன் கம்பி, மின்சார விளக்கு முதலிய சகலமும் அறுக்கப்பட்டு ஒரே இருளாக இருக்கிறது. ஜம்புலிங்கத்தின் மனைவி மிகவும் துடிக்கிறார்கள். நீ தைரியமாய்ப் படுத்திரு. கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கையில் ஜம்புலிங்கத்தையே காணவில்லை..................உன்னிடம் வஞ்சம் வைத்துக்கொண்டு இத்தனை விபத்துக்களை உண்டாக்கியிருக்கிறார்கள். உன்னையும் ஏதாவது செய்துவிடப் போகிறார்களே என்கிற பயத்தினால்தான் உன்னை எச்சரிக்கை செய்துவிட்டுப் போவதற்கு வந்தேன். போலீஸார் வந்துவிடுவார்கள். நீ இந்த அறைக் கதவை உள்தாழ்ப்பாளிட்டுக்கொண்டு ஜாக்ரதையாக உன் பெற்றோருடன் இரு நீ ஏதாவது வெளியில் வந்து கலாட்டா செய்துவிடாதே. இதைச் சொல்வதற்காகவே நான் வந்தேன். ஜம்புலிங்கத்தையே காணவில்லை என்றால் இந்த அதிர்ச்சியைச் சொல்லவே முடியவில்லை" என்று அவர் சொல்வதைக் கேட்கக் கேட்க ராஜாவுக்கு உண்மையில் தாங்கமாட்டாத உணர்ச்சி வேகத்துடன் என்ன! என்ன! ஜம்புலிங்க மாமாவைக் காணவில்லையா! ஐயையோ! டாக்டர்! நீங்கள் என்னசொன்னாலும் சரி. நான் இங்கிருக்கவே மாட்டேன். கட்டாயம்உங்களுடன் வந்துதான் தீருவேன் டாக்டர் மாமா! ஜம்புலிங்க மாமா எப்படிக் காணாது போயிருப்பார்! எனக்குக் கேட்கும்போதே அழுகை யழுகையாய் வருகிறதே என்று கூறியவாறு அழுதுவிட்டான்.

இந்தப் பயங்கரங்களைக் கேட்டதுதான் தாமதம் ஏற்கெனவே பயந்து நடுநடுங்கிக்கொண்டிருந்த பயம் ஆயிரம் மடங்காகப் பெருகியதோடு இனி தான் தன் மகனை வைத்துக்கொண்டு இந்த இடத்திலேயே இருக்கக் கூடாதென்றும், உடனே ராஜாவை அழைத்துக்கொண்டு எங்காவது போய்விட வேண்டும் என்கிற தீவிர எண்ணம் உதித்துவிட்டது. தன் மகனுக்கு ஏற்கெனவே விபரீத விபத்துக்கள் ஒன்றன்பின் ஒன்ருக வந்து கொன்று கொண்டிருப்பது போதாமல் இன்னும் என்ன வந்து விடுமோ என்கிற பயமும் திகிலும் சொல்லத் தெரியாதவாறு வேதனை செய்யும் சமயம் டாக்டர் கூறிய விசித்திரச் சம்ப வத்தைக் கேட்டதும் பின்னும் ஆயிரம் வாள்கொண்டு அறுப்பதுபோன்ற அதிர்ச்சி உண்டாகி வதைக்கவாரம் பித்ததால் தன் பொறுமையை இழந்து டாக்டரே ப்ரமிக் கும் வகையில் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "டாக்டர்!எனக்குப் பேசவே தெரியவில்லை. ஏதோசங்கடம் செய்து வாட்டுகிறது. எத்தனையோ தவம் செய்து பிறந்த என் ராஜாவை நீங்கள்தான் இந்தப் பேராபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். அப்பேர்ப்பட்ட புலிபோன்ற ஜம்பு லிங்கத்திற்கே இத்தகைய ஆபத்து வந்துவிட்டதென்ருல் இந்தச் சுண்டெலிபோன்றச் சிறுவனுக்கு என்ன வந்து விடுமோ என்று நான் பயப்படுகிறேன். இவனை நாங்கள் எப்படியாவது ஜாக்ரதையாக எங்கள் க்ராமத்திற்கு அழைத்துச் சென்று விடுகிருேம். இச்சின்னஞ்சிறு குழந்தை பிழைத்திருந்தால் போதும். அவனுக்குப் புகழும் வேண்டாம். அதனல் வரும் விபரீத விபத்தும் வேண்டாம். தயவுசெய்து எங்களை விட்டுவிடுங்கள். நாங்கள் இப்போதே என் சகோதரன் வீட்டில் தங்கிப் பிறகு க்ராமத்திற்குப் போய்விடுகிருேம் என்று புத்திரவாத்ஸல்யம் பொங்கித் ததும்பக் கேட்டாள்." அவளுடைய நெஞ்சில் வேலை செய் யும் சங்கடத்தை அவள் கண்களுடைய அருவிகளும் விம்ம லும் எடுத்துக் காட்டியதைக் கண்ட டாக்டரின் மனமும் உருகியது. அவர் மனைவியின் உள்ளம் அதற்குமேல் இளகியது."டாக்டர்! இந்தம்மாளின் பரிதாபத்தைப் பார்த் தால் எனக்கு மிகவும் வருத்தமாய் இருக்கிறது. அந்தம் மாளையும், குழந்தையையும் அனுப்பிவிடுங்கள். பிறகு ஏதாவது நேர்ந்துவிட்டால் நம் தலையில்தான் விடியும். அப்பேர்ப்பட்ட ஜம்புலிங்கத்தையே காணவில்லை மாய மாய் மறைந்துவிட்டார் என்ருல் எனக்கே தாங்க முடியாத பயமாயும், அதிர்ச்சியாயும் இருக்கிறது. ஆகையால் நீங்கள் நமது காரில் ஜாக்ரதையாக இவர்களைப் பிறர் அறியாமல் அனுப்பிவிடுங்கள். பிறகு என்னவாகிறதோ பார்க்கலாம்.

நீங்கள் முதலில் இவர்களை அனுப்பிவிடுங்கள்" என்று கூறினாள்.

இவைகளைக் கேட்ட ராஜா பிடிவாதமாக "டாக்டர்! நான் இப்பொழுது உங்களுடன் அங்கு வந்துதான் தீரு வேன். அதன் பிறகு வீட்டிற்குப் போகிறேன்" என்று மொண்டி செய்தான். ஆனால், அவனை அந்த இடங்களுக்கு அனுப்ப அவன் பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. அவனை மிரட்டித் திட்டியவாறு சிறு குழந்தையைத் தூக்குவது போல் தூக்கிக்கொண்டு அவன் பிதா நடக்கவே தொடங்கி விட்டார். இந்த இரவு நேரத்தில் தனிமையில் வெளியே அனுப்ப மனமற்ற டாக்டர் தன்னுடைய காரில் இவர்களை ஏற்றி அனுப்பிவிட்டுத் தன் மனைவியை ஜாக்ரதையாக இருக்கும்படிச் சொல்லிவிட்டு ஓடினார்.

இதற்குள் அங்கு ஆஸ்பத்திரியிலிருக்கும் பல வேலை யாட்கள், டாக்டர்கள் எல்லோரும் கூடிவிட்டார்கள். டாக்டர் அங்கு வந்ததும் சிறிது நேரத்திற்கெல்லாம் போலீஸ்காரர்கள் வந்து விட்டார்கள். டெலிபோன், விளக்கு முதலியவைகளின் மின்ஸாரங்களை வேண்டு மென்றே கைதேர்ந்த ஆட்கள் முன்னெச்சரிக்கையாக அறுத்திருக்கிறார்கள் என்பதை யறிந்த போலீஸ்காரர்கள் கைவிளக்குகளைக் கொண்டுவரச் செய்துமுழுதும் ஒருமுறை பார்த்தார்கள். இதற்குள் மயக்கமாக விழுந்து கிடக்கும் ஆட்களைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குக் கொண்டுவிட்டு வெகு கவனத்துடன் அவர்களைப் பரி சோதித்ததில் மயக்கத்தை உண்டுபண்ணக்கூடிய ஒருவகை த்ராவகத்தை எப்படியோ இவர்களை முகரும்படிச் செய் திருக்க வேண்டும். அந்த மயக்கம் தானுகத் தெளிவு உண்டாக நான்கு மணி நேரம் கணக்கு. மிகவும் பல வீனப்பட்டுள்ளவர்களுக்கு இன்னும் வெகு நேரம் சென்று தான் தெளிவு உண்டாகும் என்று டாக்டர்கள் கூறிவிட் டார்கள். மயங்கிக் கிடக்கிறவர்கள் எழுந்தாலன்றி விஷயங் களை அறியும் மார்க்கமே இல்லையாதலால் குழம்பித் தவிக் கின்றார்கள்.

ஸிம்மம், புலி என்றால் பொருந்தக்கூடிய ஜம்புலிங்கம் எப்படித்தான் மறைந்திருக்க முடியும். யாராவது அவ ரையே கொள்ளையடித்துக்கொண்டு போயிருந்தாலன்றி அவரால் காலை அசைக்கக்கூட முடியாதே. இந்நிலைமை யில் அவர் எப்படி நடந்து போயிருக்க முடியும். இதில் கட்டாயம் ஏதோ மோசம், சதி, சூழ்ச்சி நடந்திருக்கிறது

என்று எல்லோரும் கூடிக் குழம்பிப் பேசிக்கொண்டு அவ்வறை பூராவும் மறுபடியும் பார்த்தார்கள். ஜம்புலிங்கத்துடன் பேசிக்கொண்டிருந்த கேடிதான் ஏதாவது செய்து விட்டிருப்பானு! என்கிற சந்தேகமும் உண்டாகியது.

அங்கமுத்துவுடன்கூடவந்த மற்ருெருவர் எங்கிருப்பார் அவரைக் கண்டு விசாரித்தால் ஒருவாறு விஷயம் தெரியும். அவர் இருப்பிடத்தை யறியாது விட்டுவிட்டோமே. அவர் கேட்ட சர்டிபிகேட்டும் மருந்தும் மட்டும் எழுதிக் கொடுத்து விட்டதால் இனி அவரை எப்படித் தேடிப் பிடிப்பது என்கிற ஒரு புதிய எண்ணம் தோன்றியதால் அவர்களது ட்ரைவரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

எத்தகைய ஆதாரமும் கிடைக்காதக் குழப்பத்துடன் போலீஸ்காரர்களும், மற்றவர்களும் கூண்டிலடைபட்ட சிங்கம்போல் இங்குமங்குமாக உலாவுகிருர்கள். இதற்குள் டாக்டரின் ட்ரைவர் வந்தான். டாக்டர் பரபரப்புடன் அவனிடம் சென்று, "ராஜாவையும், அவன் பெற்றேரையும் ஜாக்ரதையாகக் கொண்டு விட்டுவிட்டு வந்தாயா! எங்கு போனுர்கள்?" என்று பரபரப்புடன் கேட்டார்.

**ட்ரைவர்:**—யாரோ ஒரு சிநேகிதரின் வீடாம். அங்கு தான் விடச்சொன்னுர்கள். அவருடைய வீட்டில் கதவை இடித்து உள்ளே செல்கிறவரையில் நான் நின்று பார்த்து விட்டு உள்ளே மூவரும் ஜாக்ரதையாகச் சென்ற பிறகு வந்தேன். ராஜா என்னமோ கூடவே வருவேன் என்று மறுபடியும் பிடிவாதம் செய்தான். நாளைக்காலையில் நானே கார் கொண்டுவந்து அழைத்துப் போவதாகக் கூறிவிட்டுச் சமாதானப்படுத்தி யனுப்பினேன்.

**டாக்டர்:**—சங்கர்! சற்று முன்பு என்னிடம் இரண்டு பேர்கள் வந்து பேசிக்கொண்டிருந்தார்களே, அவர்கள் வந்த கார் நம்பரை நீ பார்த்தாயா!

**ட்ரைவர்:**—ஓ! பார்த்தேன். அது இந்த ஊர் கார் அல்ல. மைசூரைச் சேர்ந்தது. அந்த ஊர் நம்பர்தான் இருந்தது. எதற்கு எஜமான்?

**டாக்டர்:**—என்னிடம் இருவர் வந்து பேசுகையில் ஒருவரை ஜம்புலிங்கம் அழைத்ததால் மற்ருெருவர் காரில் நேரே போய்விட்டார். அவரைப் பார்க்க வேண்டும். அவர் இறங்கியிருக்கும் இடம் தெரியுமா? (இங்கு நடந்துள்ள

பயங்கர விபத்துக்களை எல்லாம் கூறி) இப்படியாகிவிட்டது. இதற்கு உடனே அவரைப் பார்த்துச் சில விஷயங்களறிய வேண்டும்........

ட்ரைவர்:—என்ன! என்ன! இன்ஸ்பெக்டரய்யாவையாக் காணவில்லை! இதென்ன அதிர்ச்சிகரமான விஷயம். தாடி சாமியார்தான் இன்ஸ்பெக்டரய்யாவிடம் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் இருவரையுமா காணவில்லை....ஸார்! அவர்கள் எங்கு தங்கியிருக்கிறார்கள் என்பது ட்ரைவர் மூலம் தெரிந்துகொண்டிருக்கிறேன். போய்ப் பார்த்து விட்டு வரட்டுமா ஸார்—என்றான்.

டாக்டருக்கு மிகுந்த சந்தோஷமாகிவிட்டது. சங்கர்; நீ உடனே நம் காரிலேயே சென்று அந்த மனிதரையே இங்குக்கூட்டிக்கொண்டுவா! இந்த விஷயத்தைப் பிறரிடம் சொல்லாதே. அவருக்கும் இன்னது விஷயம் என்பதைக் கூறாமல் அழைத்து வா! என்று உத்திரவிட்டார்.

அதே சமயம் மிக்க விசனமே உருவமாய் ஜம்புலிங்கத்தின் மனைவி அங்கு வந்து "டாக்டர்! அவர் எங்கு சென்றிருக்கிறார் என்று ஏதாவது தெரிந்ததா ! எனக்குத் தாங்கள் டெலிபோன் செய்தபிறகு சரியான துணை கிடைக்காமல் தத்தளித்தவாறு வாசற்கதவைத் தாளிட்டுவிட்டு ஜன்னலால் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு சிறிய பையன் (12 வயதிருக்கும்.) அவன் வெகு சர்வ சாதாரணமாக ஒரு மூட்டையுடன் வந்து கதவைத் தட்டினான். நான் பார்த்துக்கொண்டே இருந்ததால் உடனே கதவைத் திறந்து 'யாரப்பா!' என்று விசாரித்தேன். அவன் சற்றுகூட வித்யாஸ மனப்பான்மையே இல்லாத முறையில் 'அம்மா ! இன்ஸ்பெக்டர் ஜம்புலிங்கத்தின் ஸம்ஸாரம் நீங்கள்தானா!' என்று தைரியமாகக் கேட்டான். நான் வியப்புடன் "ஏனப்பா! நீ யாரு! என்ன சமாசாரம்....நான்தான் அவர் மனைவி ஏன் கேட்கிறாய்!" என்று பதபதைப்புடன் கேட்டேன். உடனே அந்தப் பையன் "இந்த மூட்டையைப் பத்திரமாக உங்களிடம் கொடுத்துவிடும்படி இன்ஸ்பெக்டர் ஐயா சொல்லிக்கொடுத்தனுப்பினார்களாம். இந்தாருங்கள்" என்று கொடுத்தான்.

எனக்குமட்டும் என்னையறியாது ஏதோ செய்தது. "இன்ஸ்பெக்டர் கொடுத்தாரா! அவர் இப்பொழுது எங்கு இருக்கிறார்....இன்னும் என்ன சொன்னார்" என்று கேட்டேன். அதற்கந்த பையன் "எனக்கென்னம்மா தெரியும்

நான் மிட்டாய் விற்கிற பையன். ஒரு கருத்த மனிதர் வந்து "இன்ஸ்பெக்டர் ஐயா ஊடு எது என்று கேட்டு என்னைக் காட்டச் சொன்னரு. அதற்காக எனக்கு ஒரு ரூபாய் பணமும் கொடுத்தாரு", நான் கூடவந்து வீட்டைக் காட்டினேன். அவர் "விஷயம் ஒன்றுமில்லை தம்பீ! இன்ஸ்பெக்டர் ஐயா இந்த மூட்டையை அவர் மனைவியிடம் கொடுத்துவிடும்படிக்கு என்னிடம் அனுப்பினர். இதை நீ தான் சற்று கொடுத்துவிடேன்—நான் அவஸரமாகப் போக வேண்டும்....நல்ல பிள்ளையோன்னே' என்று சொன்னர். சரி என்று நான் வாங்கிக்கொண்டேன். உடனே அவர் போய்விட்டார். நான் வரேனம்மா!" என்று சொன்னபோது என்னைத் தூக்கி வாரிப் போட்டது. உடனே நான் "தம்பீ! சற்று இரு என்று சொல்லிவிட்டு அந்த மூட்டையை உடனே அவிழ்த்துப் பார்த்தேன். அதில் நான் கண்ட காட்சி என்னைத் தூக்கி அப்படியே நெருப்பில் போட்டுவிட்டதுபோலாகிவிட்டது" என்று கூறும்போதே அந்த அம்மாளின் உடல் கிடுகிடென்று நடுங்கியது.

டாக்டர்:—அம்மணீ! சற்று சமாளித்துக்கொள்ளுங்கள். மூட்டையில் என்ன இருந்தது. இன்ஸ்பெக்டர் ஏதாவது கடிதம் வைத்திருந்தாரா! என்று தன் பதறலையும் காட்டிக் கேட்டார்.

கடிதமாவது, கண்ருவியாவது டாக்டர். இதோ மூட்டையைக் கொண்டு வந்திருக்கிறேன்பாருங்கள், என்று கூறியவாறு அதைப் பிரித்துக் காட்டினள். என்ன பயங்கரமான காட்சி! இன்ஸ்பெக்டர் அணிந்திருந்த உடைகள் அப்படியே ரத்தத்தில் புரட்டியதுபோன்ற கோராமையுடன் இருந்தது பார்த்த எல்லோருமே தீயை மிதித்தவர்கள்போல் துள்ளினர்கள். ரத்தம் அப்போதுதான் தோய்ந்திருக்கும் ஈரத்துடன் ஒட்டுவதாகவும் இருந்தது. அவைகளைக் கண்ட டாக்டருக்குக் குலை நடுக்கமெடுத்துவிட்டது. பல ஆபரேஷன்களைச் செய்து ரத்த ப்ரவாகங்களை அநாயாசமாகப் பார்த்து லக்ஷியம் செய்யாமலிருந்த அவரே இந்தக் காட்சியைக் கண்டு கதிகலங்கிப் போய்விட்டார் என்றல் மற்றவர்களைக் கேட்கவா வேண்டும்.

டாக்டர் சற்று சமாளித்துக்கொண்டு அதில் இன்னும் என்னென்ன இருக்கிறதென்று ஒரு ஆளைவிட்டுப் பிரிக்கச் செய்து பார்த்தார். அதில் இன்ஸ்பெக்டரின் உடைகளைத் தவிற வேறு உடைகளும் இல்லை. கடிதம் முதலிய எதுவும் இல்லை. ஆனல் அவருடைய உயிருக்குயிரான ஜேபி

கடிகாரமும், சதா கைவிரலில் அணிந்துகொண்டிருக்கும் நல்ல முத்து, வைரம், பச்சை மூன்றும் பதித்த அழகிய மோதிரம் இரண்டுமட்டும் சொக்காய் ஜேபியில் இருக்கக் கண்டதும் உண்மையில் அவர்கள் தலைமீது வானமே இடிந்து விழுந்துவிட்டது போன்ற மகத்தான அதிர்ச்சி உண்டாகித் தலை சுற்றியது. இன்ஸ்பெக்டரின் உடைகள், மோதிரம், கடிகாரம் மட்டும் எப்படி இங்கு வந்திருக்கக் கூடும். கள்ளர்களா இருந்தால் விலையுயர்ந்த பொருளை விடுவார்களா? அதோடு ரத்தக்கறை எப்படி உண்டாகி இருக்க முடியும்....ஒன்றுமே புரியவில்லையே என்று கதி கலங்கிக் கல்லாய்ச் சமைந்து நின்றுவிட்டார்கள். இன்ஸ் பெக்டரின் மனைவிக்கு மயக்கமே வந்து விழுந்துவிட்டாள்.

---

## 24

### கருத்தவானிலும் கடவுளின் ஒளி

பவானி ஏறிச் செல்லும் கார் கனவேகமாகப் பறந்து செல்வதைக் கண்ட முருகப்பனின் சப்தநாடியும் அடங்கி விட்டது. காரின் வேகத்தைவிட கடுகிய வேகத்துடன் அவன் எண்ணங்களும் பறக்கின்றன. தன்னை யொரு தாயார்தான் பெற்றிருப்பாள், அவளன்றிதான் இந்த மண்ணில் ஒரு உருவாகி இருக்கமுடியாது, என்கிற எண்ணத்தையே மறந்திருந்த முருகப்பனுக்கு அவன் தாயார் அந்திம நிலைமையில் இருக்கிறாள் தன்னைப் பார்க்க வேண்டுமென்று துடிதுடிக்கிறாள் என்று பவானி சொல்லிச் சென்ற வார்த்தைகளின் தாக்குதல் இதுகாறும் அவன் அடைந்திராத ஒரு மின்ஸார விசை பாய்ந்தவாறு இதயத்தின் அடித்தகட்டில் பாய்ந்து அம்மா...........என்று வாய்விட்டுக் கூவச் செய்து விட்டது.

"என்னைப் பெத்த தாயாரா உயிர்துறக்கும் நிலையி லிருக்கிறாள்? இந்த உதவாக்கரை மனிதனையா பெத்த பாசத்தின் மிகுதியினால் பார்க்க வேண்டுமென்று தவிக் கிறாள். ஐயோ! இத்தனை நாட்களும் என் முன்னறி தெய்வத்தைப்பற்றி அடியோடுமறந்து-மறத்துப்போயிருந்த பாதகன் அவள் முகத்தில் எப்படி விழிப்பேன்? அவள் இந்தச் சண்டாளனின் முகத்தைப் பார்க்க மனமின்றி இதற்குள் உலகையே விட்டு மறைந் திருப்பாளோ! நான் இத்தனை நாட்களும் சத்ருவாக வாழ்ந்துவிட்டு பெரிய கொலைகாரன் என்கிற பயங்கர

கவசத்துடன் அந்த மகா உத்தமியின் முன்பு எப்படிச் செல்வேன்? இந்த நிலைமையில் எனக்கு மூளை கலங்கிப் பயித்தியம் பிடித்து விட்டால் கூட தேவலை என்று தோன்றுகிறது. என்ன செய்வேன்" என்று: கலங்கித் துடிக்கும் நிலைமையில் ஒன்றுமே தோன்றாது கார் சென்று மறைந்துவிட்ட திக்கையே பார்த்துக்கொண்டு கல்லாய் விட்ட சமயம், ஒரு சின்ன பையன் விறைக்கவிறைக்க ஓடி வந்து "ஐயா! போலீஸ்காரய்யா! எங்க வீட்டிலே திருடன் புகுந்து விட்டான் கொஞ்சம் வாங்களேன்" என்று கத்தினன்.

அப்போதுதான் தான் போலீஸ்காரன் உடையில் நடுவீதியில் நிற்கும் அலங்கோல நிலைமை நன்ருகத் தெரிந்ததும் ஒரு குலுக்குக்குலுக்கியது. தான் இந்த நெருக்கடியான நிலைமையில் என்ன செய்வது என்று தத்தளிப்பதற்குள் "ஐயா!போலீஸ்காரய்யா வாங்களேன்" என்று மீண்டும் அந்த பையன் கத்தினன்.

தனது வேஷத்திற்குத் தக்கபடி நடித்துவிட வேண்டும் என்ற உணர்ச்சி உந்தியதால் "ஏண்டா! பையா! திருடன் வந்திருக்கிறான் என்கிறாய் நீ வந்து என்னை கூப்பிடும் வரையில் அவன் உன் வீட்டிலேயே புகுந்து கொண்டிருப்பானா! உன் வீடு எங்கேடா இருக்கிறது?" என்று அதிகார த்வனியை வரவழைத்துக்கொண்டு கேட்டான்.

பையன்:—இதோ பக்கத்து முட்டு சந்தில் எங்க வீடு இருக்குதுங்க எங்கம்மா இடியாப்பம், சுண்டல், முறுக்கு, மஸால்வடை எல்லாம்சுட்டு விக்கரவங்க. அவங்க பக்கத்துத் தெருலே இருக்கர பள்ளிகூடத்து வாசல்லேதான் கடை போட்டு விக்கப் போவாங்க. நானு சாயந்தர வேளெலே கடல் கரைலே முருக்கு மஸால் வடை விக்கப்போவேன். இன்னிக்கு மழெ வந்திடுச்சல்ல. அது நாலே நான் பீச்சிலே விக்காமே ஊட்டுக்கு வந்துட்டேன். எங்கம்மா மட்டும் பள்ளிக்கூட வாசல்லேயே இருக்கரா. நான் வீட்டுக் குள்ளார போகும்போது ஒரு சாமியார் மாதிரி இருக்கர ஆளு உள்ளே குந்திக்கிட்டு சமான்களெ எடுத்து வைக்கரதெ பாத்து ஒரேடியா பயந்துபோய்க் கூச்சப் போட்டுக் கத்திட்டேன். கதவை இழுத்து வெளியே சங்கிலி போட்டுட்டு போலீஸூக்குப் போக ஓடியாந்தேன். நீங்க கண்ணுக்குத் தெரிஞ்சதும் இங்கே வந்தேன். வாங்க சாமி சீக்கிரம் வாங்க என்று பதைக்கப்பதைக்கக் கத்தினன்.

பவானியின் கடைசி வார்த்தைகளாகிய 'கடவுள் ஒருவன் இருக்கிறன் என்பதை நம்புங்கள்' என்ற மிக்கச் சிறந்த மந்திர வாக்யத்தின் நினைவு பளிச்சென்று இவன் இதயத்தில் மின்னி நினைவுறுத்தியதும் ஒரு புத்துயிர் பெற்றப் புதிய மனிதன் போலத் தெம்பையடைந்துத் தன்னை மிகமிக ச்ரமப்பட்டுச் சமாளித்துக்கொண்டு "ஓகோ! வீட்டுக்குள் புகுந்திருப்பவனை ஜாக்ரதையாகப் பூட்டிவிட்டு வந்தாயா! பலே கெட்டிக்காரப் பயலடா நீ உம் கிளம்பு அவன் தோலை உரித்து விடுகிறேன்". என்று கூறியவாறு வெகு ஜரூராக நடந்தான். "கடவுளே! நீதான் துணைபுரிய வேண்டும் பவானியின் பரிசுத்தமும் பதிபக்தியும் இது காறும் அறியாத முட்டாளாக இருந்தேன். இன்றுதான் என் இருண்ட வாழ்க்கையின் பயங்கரத்திற்கு ஒரு தீபம் ஏற்றி வைத்தது போன்ற உண்மையான உணர்ச்சியை அடைகிறேன்". என்று மனத்திற்குள் கடவுளை எண்ணிய படியே நடந்தான்.

பையனின் வீடு வெகு சமீபத்திலிருந்ததால் "சார்! இதுதான் எங்கள் வீடு" என்று வீட்டைக் காட்டினன். இதற்குள் அங்குகூட அக்கம்பக்கத்தில்குடியிருக்கிறவர்கள் வாசலில் கும்பலாகக் கூடிவிட்டார்கள். இச்செய்தி பைய னின் தாயாருக்குத் தெரிந்து அவளும் வந்து வயிறெரியக் கத்துகிருள்.

இதைக் கண்ட முருகப்பன் உள்ளுக்குள்தான் என்ன விதமாக நடந்துகொண்டு திருடனைப் பிடிப்பது' என்கிற பயம் வேறு வாட்டுகிறது. தனது வேஷத்திற்கேற்ப நடிப்பை விடாது, "இதென்ன கூட்டம் இதென்ன இறைச்சல் விலகிப் போங்கள் எங்கே அந்தக் கள்ளப்பயல் தோலை உறித்து உப்புத் தடவி விடுகிறேன். என்று கூறியவாறு கதவைத் திறந்தான்.

பார்க்கச் சகியாத ஒரு கோரஸ்வரூபம் தாடி மீசை எல்லாம் நிரைத்து சடை கட்டிப்போய்த் தொங்குகிறது. தலையின் அலங்கோலமோ சொல்லத்தரமில்லை. சடை திரிதிரியாகத் தொங்கி நாற்றமடிக்கிறது. அந்த மனிதனின் கண்களோ! முட்டைக் கணக்கில் சாமான்களைக் கொட்டி வைக்கலாம் போன்ற குழிவுடன் நிராசையின் ரேகை படர வெளிரிக் கிடக்கும் கண்ட்ராவி சொல்லி முடியாத பரிதாபமாக இருக்கிறது. அன்று வ்யாபாரத்திற்காகச் செய்து மிச்சப்படுத்தி யிருந்த பலகாரத்தை நிம்மதியாக

உட்கார்ந்து சாப்பிட்டவாறு பெருமூச்சும் சிறுமூச்சுமாக ஸ்வஸ்தமாய்உட்கார்ந்திருந்ததைக்கண்ட எல்லோருக்குமே ஒருவிதமான வியப்பும் திகைப்பும் உண்டாகிவிட்டது. முருகப்பன் மிக தைரியத்துடன் உள்ளே புகுந்து "டேய் கள்ளச்சாமியாரே உள்ளே அமைதியாகத் திருடித் தின்கிறாயா!" என்று கூறியவாறு முதுகில் ஒரு குத்து விட்டான். குத்தும்போது இவன் கையே நடுங்குகிறது. மனச்சாட்சி வேறு இவன் மனத்தில் குத்துகிறது.

சாமியாரோ இவனை நிமிர்ந்துகூட பார்க்காமல் "இரப்பா! இன்னும் மூணுமுருக்குதான் இருக்குதுஅதைத் துண்ணுப்புட்டு போயிட்ரேன். இரப்பா.......இரப்பா...." என்று சொல்லியவாறு கடுக்குமுடுக்கு என்று கடிக்கும் தனது கடமையை—ஸ்வாரஸ்யத்தை—விடவில்லை. இவனுடைய நிலையைக் கூர்ந்து கவனித்த எல்லோருக்கும் பாவம் இவன் திருடனல்ல தெருவில் அலையும் பரதேசிப் பயித்தியம் அட எழவே இதைக் கவனிக்காமே அந்த புள்ளே திருடன் திருடன்னு கூக்குறல் போட்டதனாலே நிஜமான திருடனுங் காட்டியமுண்ணு நினைச்சுக்கிட்டோம் பாவம் ஒரு சாது பயித்தியம் ஐயா போலீஸ்காரய்யா! இவனெ ஒண்ணும் பண்ணாதெ உட்டுடுங்க. இந்த சின்ன பையன் பண்ண அசட்டுத்தனத்துலே இப்படியாயிடுச்சுங்க இந்த பயித்தியத்தை உட்டுடுங்க என்று எல்லோரும் சொன்னார்கள்.

முருகப்பனுக்கு எதனாலோ பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் சரி! சரி! பயித்தியமோ! பண்டாரமோ! சாமியாரோ! சீமியாரோ! எனக்குத் தெரியாது போலீஸான் கையில் அகப்படட எவனையும் போலீஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் விசாரணை செய்து பின்னர் விட்டு விடுகிறேன் நானாக இப்போது விட்டுவிட்டால் நான் ஏதோ லஞ்சம் வாங்கிக்கொண்டு விட்டுவிட்டதாக என் பெயர் கெட்டுவிடும் நானும் மனிதன்தான் இதயம் உள்ளவன்தான் இவனை அடிக்கவோ இம்லிக்கவோ மாட்டேன் போலீஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் அதிகாரிகளிடம் விஷயத்தைக் கூறிக்கூட்டிவிட்டு துரத்தி விடுகிறேன். நீங்கள் பயப்பட வேண்டாம். வழிவிடுங்கள்........ஏய்! சாமியாரே! சாப்பிட்டாயிற்றா முறுக்கு தீர்ந்து விட்டதா இன்னும் இருக்கிறதா என்றான்.

சாமியார் பதிலே பேசாமல் கையிலிருக்கும் பலகாரத்தை மட்டும் காட்டிவிட்டுத் தின்னவாரம்பித்ததைக்

கண்டு எல்லோரும் சிரித்தார்கள். முருகப்பன் சிரிப்பை அடக்கிக்கொண்டு, "ஏய்! சாமியாரே பலகாரத்தை யாரும் தின்றுவிட மாட்டார்கள். அவைகளை நீயே மூட்டைக் கட்டிக்கொண்டு கிளம்பி என்னேடு வா! நல்ல பணியாரக் கடைக்கு அழைத்துச் சென்று இன்னும் ஏராளமான பலகாரங்கள் வாங்கித் தருகிறேன் நிறைய சாப்பிடலாம் வா! உம்....சாமியாரே! எழுந்திரு" என்று கூப்பிட்ட உடனேயே அந்த சாமியார் கையிலிருந்த முருக்கு முதலியவைகளை வீசி எறிந்து விட்டு மறுபேச்சின்றி உடனே கிளம்பி விட்டது. நடக்கவே சீவனற்ற நிலையில் சாப்பாட்டு விஷயத்திலுள்ள ஆத்திரத்தினல் கால்கள் வேகமாக நடப்பதுபோல் பின்னவிட்டுக்கொண்டு நடந்து செல்வதைக் கண்ட முருகப்பனுக்கு உள்ளுக்குள் ஐயோ! பாவம் என்கிற உணர்ச்சிப் பொங்கி வழிந்தது. அவைகளை அடக்கிக்கொண்டு சாமியாரை அன்பாக அழைத்துச் சென்று விட்டான்.

அப்போது இராக்காலம் ஒன்று. சிறுமழைத் துளிகள் இன்னும் உதிர்ந்து கொண்டே இருந்ததால் அங்குள்ளக் கூட்டம் அவனுடன் பின் தொடரவில்லை. சாமியாரை நல்ல வார்த்தைகள் பேசி அவனிடம் சில விஷயங்களை அறியஆவல்தூண்டியதால்....''ஏய்! சாமியாரே நீ யாரு...............உன் பேரென்ன? நான் யாரு உனக்குத் தெரியுமா!"என்று கேட்டான். முதல் சில நிமிஷம் மவுனமாயிருந்த சாமியார் முருகப்பனை ஏறஇறங்க எதற்கோ பார்த்தான். அடுத்த க்ஷணம் கைகளைத் தட்டிச்சிரித்துக் கொண்டு "டேய்! டேய்! போலீஸ்காரனுடா நீ! உன்னையா எனக்குத் தெரியாது. ரொம்ப நன்ஞ தெரியுண்டா! என்னை என்னன்னுடா பாத்தே சித்திவினயக புத்திவினயக சரணம் சரணம் சங்கரனே நான் பூசாரி சாமீயாரடா!........ டேய்...........எங்கேடா பலகாரம் எங்கையிலிருந்த முறுக்கு எங்கேடா! எங்க காமாச்சிக்கு கொண்டு குடுக்கணன்டா..." என்று ஒன்றுக்கொன்று தகவலின்றிப் பேசுவதைக் கண்ட முருகப்பனுக்கு ஏதேதோ எண்ண அலைகள் சுருண்டுசுருண்டு எழுகின்ற வேகத்தை அடக்கிக்கொண்டு "சாமியாரே! இதோ இந்த மரத்தடியிலே இரு. நான் போய் பைநிறைய பலகாரம் வாங்கிக்கொண்டு வரேன் எங்கே நீ யாருன்னு திரும்பவும் சொல்லு பாக்கலாம்" என்ருன்.

"என்னையாடா யாருன்னு கேக்கரே சித்திவினயக புத்திவினயக சரணம் சரணம் சங்கரனே" என்ற அடிகளை மட்டும் பாடிப்பாடி இரண்டு மூன்றுதரம் கைகளைத்

கொட்டி "நான் பூசாரிச் சாமியாரடா! எங்கேடா மிட்டாயி எங்க காமாச்சிக்கு கொண்டு போகணுண்டா" என்றான்.

"ஏய்! சாமியாரே! ஒங்க காமாட்சி எங்கே இருக்கா எடத்தைச் சொல்லு நான் போய்க் கூட்டியாந்து ஒம் பக்கத்துலேயே இருக்கச் சொல்றேன். காமாட்சி என் கிறவள் யாரு உனக்கென்ன உறவு வேணும்" என்று அடுக்கடுக்காய் கேட்டான்.

இதுகேட்ட சாமியார் "ஐயயோ! காமாட்சியை ஒனக்குத் தெரியாதா! ஐயோ! அவ எத்தினி அழகாயிருப்பா தெரியுமா! அவ என்....என்... கண்ணுட்டி....ராசாத்தி........ சித்தி விநாயகா புத்திவிநாயகா சரணம் சரணம் சங்கரனே ........இந்த பாட்டெ அவதான் பாடுவா....தே........போலீஸ் காரய்யா முட்டாயி எங்கேப்பா"என்றான்.

சாமியாரை மரத்தடியில் உட்கார வைத்துவிட்டு அருகிலிருந்த மிட்டாய்க் கடைக்குப் போய் ஒரு பெரிய பொட்டலமாக பலவித மிட்டாய்கள் வாங்கிக்கொண்டு வந்து சாமியாரிடம் நீட்டினான். அந்த வாஸனையைப் பார்த்ததும் சாமியார் மெத்த மகிழ்ச்சியை அடைந்து வெகு ஆத்திரத்துடன் பொட்டலத்தைப் பிரிக்கவாரம்பித் தான்.

முருகப்பன் சாமியாரின் கைகளைப் பிடித்துக்கொண்டு "சாமியாரே இதோ பாத்தியா ரூபாய் இது உனக்கு வேணுமா!" என்று பணத்தைக் காட்டினான். சாமியார் வெகு அலக்ஷியபாவத்துடன் "சே! எனக்கெதுக்கு இந்த ரூபா! காமாட்சி செத்துட்டப்பரம் ரூபாயும் செத்துடுத்தே. எனக்கு வாணும் உடப்பா" என்று பொட்டளத்து மீது தாவினான். முருகப்பன் வெகு சாந்தமாய் "சாமியாரே! இதோ பாரு நான் சொல்றபடி கேட்டா! நானு காமாக்ஷி யிடம் ஒன்னெ இப்பவே கூட்டிக்கிட்டு போவேன். காமாட்சி செத்துப் போகவே இல்லே அவ எங்க வீட்டிலேயேதான் இருக்கிறாள். நீ இப்படியே சாமியாராட்டமா வந்தா அவள் உன்னெ பாக்கமாட்டா! நீ ஜோராஜும்னு போலீஸ்காரன் வேஷம் போட்டுக்கோ! நான் சாமியார் வேஷம் போட்டுக் கிறேன். நீ டாக்கு டக்குனு நடந்து வா. நான் காமாட்சிக் கிட்டே கொண்டு விட்டுட்டுப் போறேன் என்ன" என்று ஆசை வார்த்தைகளைக் கூறியபடியே மெல்ல அந்த நாத்தத்தைச் சகித்துக்கொண்டு அந்த உடைகளைத்தான் அணிந்துகொண்டு அவனிடமிருந்த கைத்தடி, ஜோட்டினை தகரக்குவளை எல்லாவற்றையும் அவன் எப்படி வைத்

திருந்தானே அப்படியேவைத்துக்கொண்டதோடு போலீஸ் காரன் உடையை சாமியாருக்கு மாட்டி விட்டான். "சாமியாரே! இனிமேல் நீ பயித்தியக்கார சாமியாரல்ல தெரியுமா! போலீஸ்கார வீரன். இனி நானே ராணுவ வீரன் என்று பாடிக்கொண்டே ஒய்யாரமாக நடந்து காமாட்சியிடம் போகலாம் தெரிந்ததா! சரி! இப்படி உட்கார்ந்து பலகாரங்களை எல்லாம் சாப்பிடு இன்னும் கொஞ்சம் வாங்கிக்கொண்டு வருகிறேன் என்ன! மிட்டாய் மட்டுமா போதுமா பழங்களும் வாங்கிவரட்டுமா! என்றான்."

சாமியார் தின்பதில் வெகு ருசியுடன் ஐக்யமாகி விட்டிருந்ததால் முருகப்பன் இதே சரியான சமயம் என்றுணர்ந்து தனது கையிலிருந்த கத்ரியால் சாமியாரின் ஜடைகளில் சிலவற்றை நைஸாகக் கத்தரித்துக் கையில் எடுத்துக்கொண்டு மெல்லபோவது தெரியாமல் நழுவி விட்டான். "கடவுள் ஒருவன் இருக்கிறான் என்பதை இனியாவது நம்புங்கள்" என்று பவானி சொல்லிச் சென்ற வார்த்தைகள் அவன் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்து அவனை ஒரு குலுக்குக் குலுக்கியது. பவானீ! உன்னுடைய அருமையை அறியாத பாவி நான் உன்னுடைய பெருமையை இனி உணர்ந்து என்ன பயன்? பவானீ! மீரா....என்று தனக்குள் கூறிக்கொண்டு கண்ணீர்வழிய ப்ரமை பிடித்தவன்போல் நின்று விட்டான்.

தன் தாயாரின் நினைவு பளிச்பளிச்சென்று மின்னல் தாக்குதல்போல் தாக்குவதால் இப்போது தான் எந்த திக்கு நோக்கிச் செல்வது என்கிற திகிலும் கவலையும் உண்டாகி விட்டது. ஏற்கெனவே தான் யார் கையில் அகப்பட்டுக்கொண்டு விடுவோமோ என்கிற பயத்துடன் இருந்த ஒரு கவலையுடன் இப்போது தன் தாயாரை எப்படியாவது பார்த்து கதறிவிட வேண்டும்போல் தடுக்க முடியாத ஒரு உணர்ச்சிப் பொங்கி வருத்துகிறது. சிறு தூரல் நிற்கவே இல்லை. இன்னிலைமையில் நனைந்து கொண்டே கால்போனபடி நடந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்கிற உறுதியுடன் வெகு தூரம் சென்று விட்டான்.

நடுநிசி இருள் கப்பிக் கொண்டிருக்கும் பயங்கர நிலையைக் கண்டு எதற்கும் அசையாத உறுதிகொண்டுள்ள முருகப்பனுக்கும் துணுக்குற்றது. எங்காவது ஒரு இடத்தில் தங்கி இரவைக் கழித்துவிட்டுத்தான் செல்லவேணும்

என்கிற உணர்ச்சி மேலிட்டு விட்டதால் கால்கள் பின்னிக் கொண்டு நடக்கமாட்டாத நிலையை அடைந்து விட்டது.

அச்சமயம் சிறிது தூரத்தில் ஒரு மின்மினி போன்ற விளக்கின் வெளிச்சம் தெரிந்தது. அந்த திக்கைப் பிடித்துக் கொண்டு மெல்ல சென்று பார்க்கையில் நாடோடி குருவிக்காரர்கள் டேரா அடித்துக்கொண்டு தமது பாஷை யில் பாட்டுப்பாடி எக்காளமிட்டவாறு படுத்திருப்பதையும் ஒரு சிறிய காடா விளக்கு அந்த டேராவின் ஒரு புறத்தில் எரிந்து கொண்டிருப்பதையும் கண்ட முருகப்பனுக்கு அத்தனை தைரியமும் துணிச்சலும் நிறைந்த இரும்பு இதயத்திலும் பிடித்திருந்த பயமும் திக்கிடும் தன்மையும் சிறிது குறைந்து தன்னை யறியாத ஒரு தைரியம் உண்டாகியது. தலைவிதியை எண்ணிக் கண்கலங்கியவாறு கூடாரத்தின் வெளிப்புறத்தில் தூற்றலிலேயேசளைக்காமல் உட்கார்ந்து விட்டான். குருவிக்காரர்களின் நிம்மதியும் பாட்டும் கூத்தும் கும்மாளமும் இவனுக்கு மிகவும் புதுமையாயும் இப்படியும் ஒரு நிம்மதியான சாந்தியான வாழ்க்கை வாழ்பவர் உலகிலிருக்கிறார்களா! அடாடா! என்ன அன்யோன்யமான வாழ்வு! என்ன ஆநந்தமான பொழுதுபோக்கு, இவர்களின் இதயங்களில் எத்தனை தான் சந்தோஷமும் சாந்தியும் போட்டியிடுகிறது. உம் சகல விதத்திலும் உயர்ந்த வாழ்வு வாழ்வதாக எண்ணி இறுமாந்து மனப்பபால் குடித்துக் கொண்டிருந்த என் பிழைப்பு ஒரு பிழைப்பா! நெஞ்சில் தெம்பு உண்டா! மனத்தில் சாந்திக்கு இடமுண்டா! நாலுபேர் மத்தியில் கண்ணியமுண்டா! மதிப்புண்டா! ஐயோ! நினைக்கும் போதே என்னை ஏதோ வதை செய்கிறதே என்று தனக்குள் தானே எண்ணி மனம் நொந்தவாறு உள்ளிருந்து வரும் சங்கீதம் என்கிற பெயரில்லாத ஒரு நாதம் ஆனால் ஆநந்தமும்உத்ஸாகமும்ஜீவகளையுடன் துடிதுடித்து வரும் ஒரு சந்தோஷ சப்தத்தைக் கேட்டவாறு தன்னையே மறந்து விட்டான்.

---

**அட்டைப் பட விளக்கம்**

**ராதா! நான் ரேடியோ வாங்கியபோது அனுவசியமாய்ப் பணத்தைச் செலவிட்டுவிட்டதாக நீ கோபித்துக்கொண்டாயே! நான் வாங்கியதனால்தானே இன்று மேல் நாட்டிலிருந்து உன் அருமைச் சகோதரி பேசுவதை நீ ஆனந்தமாய் கேட்கிறாய். இனி மேல் என்மீது கோபிக்கமாட்டாயே ராதா! என்று மூர்த்தி தன் மனைவியை சாந்தமாகக் கேட்கிறான். ராதா மிகப் பெருமையுடன் நானே மன்னிப்புக் கேட்க எண்ணினேன். ஏதோ எனக்கு நகை செய்யாமல் ரேடியோ வாங்கிவிட்ட கோபத்தில் சொல்லிவிட்டேன். மன்னித்துவிடுங்கள். என்று அன்பொழுகச் சொல்கிறாள்.**

# அறிஞர்களின் அமுதவாக்கு

அஸ்வின்

(13) அருள் அல்லது தயாள குணம் இல்லாத அழகு, தீனி இல்லாத தூண்டி முள்ளை ஒக்கும். வெளிப்படையாய்ப் பிரகாசித்தல் அல்லாத அழகு சீக்கிரம் சலிப்பை உண்டு பண்ணுகிறது—எமர்சன்.

(14) இன்றைய தினத்தை எவனொருவன் தன்னுடையது என்று சொல்லக்கூடுமோ, அவன்தான் சந்தோஷமுள்ளவன்—ட்ரைடன்

(15) ஆண்மைத்தனத்தோடு இரு. உன்னுடைய பாரத்தை நீயே சுமக்கிறீக. உன் விதியை மற்றவர் பேரில் சுமத்த ஒருபோதும் நினையாதே—ராபர்ட் ப்ரௌனிங்.

(16) நம்முடைய சந்தேகங்களெல்லாம் நம்முடைய துரோகிகள், ஏனென்றால் எந்தக் காரியத்தையும் செய்யமுயலுவதால் நமக்குக் கிடைக்கக்கூடிய அநேக நன்மைகளை பயம் என்கிற சந்தேகமானது செய்யவொட்டாமல் நாம் அவைகளை இழக்கும்படி செய்கிறது—ஷேக்ஸ்பியர்.

(17) உலகம் ஒரு நாடகமேடை, மனிதர்களும், ஸ்திரீகளும் அந்த மேடையில் நடிக்கும்போது தோன்றி மறையும் நடிகர்கள். ஒருவனே அவன் காலத்தில் அனேக நாடகங்களை நடிக்கிறான்—ஷேக்ஸ்பியர்.

(18) இந்த முடுக்கான உலக முழுவதும் சுற்றினதில் நான் கற்றுக்கொள்வதென்ன வென்றால் வஸ்துக்களினெல்லாம் ஒன்றுமில்லை என்பது—டென்னிஸன்.

(19) நல்ல குணமானது கந்தைகளால் உடுக்கப்பட்டிருந்தாலும், நல்ல ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்போது எவ்வளவு நன்றாய் சோபிக்கிறதோ அவ்வளவு நன்றாக சோபிக்கும்—டிக்கன்ஸ்.

(20) எந்த வஸ்துவும் உபயோக மற்றதாகவாவது, தாழ்ந்ததாகவாவது இல்லை. அதது அததனுடைய இடத்தில் மிகவும் மேலானதே—லாங் பெல்லோ.

---

[32-ம் பக்கத் தொடர்ச்சி]

இருவரையும் நமஸ்கரித்தார்கள். என்னடா சமாச்சாரம் என்று ஏககாலத்தில் கேட்டார்கள்.

அம்மா! அடுத்தப்பேட்டையில் நாங்கள் இடம்பார்த்துக் குடிப்போக ஏற்பாடாகிவிட்டது. இன்றிரவு சாப்பாட்டுக்கு நீங்கள் இருவரும் எங்கள் வீட்டிற்கு வரவேணும். என்று முதலில் பிள்ளையும் பிறகு பெண்ணும் அழைத்தபோது கல்யாணிக்கு மூர்ச்சைப் படாமல் என்ன செய்யமுடியும்.

# திவ்ய ப்ரபந்த பாசுரப்படி

## உயிர் அணிவிளக்கு

"அணிபொழில் திருவரங்கத்து அம்மானை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை,
இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றானை,
ஈரிரண்டு மால்வரைத் தோள் அம்மான் தன்னை,,
உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை,
ஊனுகப் பேய்முலை நஞ்சு உண்டான் தன்னை,
என்னுடைய இன்னமுதை எவ்வுட் பெருமலையை,
ஏத்த ஏழு உலகு உண்ட கோலக்கூத்தனை,
ஐவாய் அரவணைமேல் உறையுமவனை,
ஒளியாவெண்ணெய் உண்டானை,
ஓங்கி உலகளந்த உத்தமனை,
ஔவியப் பிறப்பில் அழுந்திவாடாது,
அஃகாமல் உய்யப் புகுமாறு
கற்றார்க்கோர் பற்றாகும் கண்ணன் கழலிணையே."

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

எனது உறவினர் ஒருவர் ஒரு சமயம் சிறுபுலியூர் சென்றிருந்த போது ஷை ஸ்வாமி திருமாளிகையில் சிதிலமடைந்த ஓலைச் சுவடிகள் பல கிடைக்கப் பெற்றாராம். அவற்றைத் தன்னால் முடிந்த வரையில்காகிதத்தில் எடுத்து எழுதி வைத்திருந்ததைக் காட்டினார். அடியேனுக்குப் பெருவியப்பு உண்டாகியது.

திவ்யப்ரபந்தவ்யாக்யான சக்ரவர்த்தியான 'பெரியவாச்சான் பிள்ளை திவ்யப்ரபந்த பாசுரப்படி ராமாயணம் அருளிச் செய்துள்ளதாக|நாம் அறிந்திருக்கிறோம். (ஜகன்மோகினி ஆபீஸிலும் அச்சிடப் பட்டுள்ளது அது.) இங்கு காணப்படும் "உயிர் அணி விளக்கு" அவர் அநுஸந்தானம் செய்ய இயற்றியதாக ஏற்படுகிறது. இன்னும் பல தொகுப்புகளும் செய்திருக்கிறார் ,என்றும் ஏற்படுகிறது. அருளிச் செயல் பாகவதமும் ஒன்று செய்துள்ளாராம். இதைப் பற்றி பிறவிவரங்களை அடுத்த ஜகன்மோகினி இதழில் வெளிப் படுத்துகிறேன். இங்கு திருவரங்கக் கலம்பகம் "அரங்கமாளிகைக் கருங்கடல் வண்ணனை" என்னும் உயிர் வருக்கமாலை நினைவுக்கு வருகிறது.

திருவாலி அ. இராமானுஜாசாரியார்

183194

(ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி)

**இந்த சரியான விடைகளை எழுதியவர்கள்.**

1—K. தங்கவேலு பிள்ளை மன்னார்குடி, 2—அலமேலம்மாள் தாம்பரம், 3—V. ராஜலக்ஷ்மி கோபாலன் காரைக்குடி. 4—சண்பகத்தம்மாள் எட்டயபுரம், 5—சேஷியம்மாள் நாகர்கோயில், 6—வரதராஜன் காஞ்சிபுரம், 7—சுந்தரம்மாள் மாதுங்கா,

இவர்கள் சரியான விடைகள் எழுதியதோடு மோகினிக்குத் தமது அன்புகலந்த வாழ்த்துக்களையும் யோசனைகளையும் எழுதியிருப்பதற்காக மிகமிக வந்தனமளிக்கிறேன்.

நேயர்கள் தங்களுடைய அபிப்பிராயங்களை அடிக்கடி எடுத்துரைத்து மோகினியின் வளர்ச்சிக்கு உதவி புரியுமாறு வேண்டுகிறேன்.

---

## ஸ்ரீ ஜே. ஆர். ரங்கராஜு காரு

ஸ்ரீ ராஜமய்யரின் கமலாம்பாள் சரித்திரத்தினால் கற்பனைக் கதையின் ருசியறிந்த நம் தாய் நாட்டில், ஸ்ரீ ரங்கராஜு காருவின் கற்பனை நவீனங்களினால் அந்த ருசி அதிகமாய் வ்யாபித்து மக்களிடைக் கற்பனைக் கதைகளின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாகத் திகழ்ந்தது. ஸ்ரீ ரங்கராஜு காரு அவர்கள் சுமார் 30 வருஷ காலமாய் எனக்குப் பழக்கமுண்டு. அந்தப் பெரியாரை நான் முதல் முதல் திருச்சிராப்பள்ளி எஸ். ஜி. ராமானுஜலு நாயுடுகாரு அவர்களால்தான் சந்திக்கப் பாக்யம் கிடைத்தது. நமது மோகினியின் வெள்ளி விழா வைபவத்தை பெருமகிழ்ச்சியுடன் நடத்தி வைத்தது குறிப்பிடத்தக்கது. அத்தகைய மேதையினுடைய சிறிய சரித்திரக் குறிப்பை மற்றோரிடத்தில் காணவும், இத்தகைய அனுபவம், ஆற்றல் மிகுந்த பெரியாரை இழந்தது நம் தமிழகத்திற்கே பெரிய நஷ்டமாகும். எமது வருத்தத்தை அன்னார்க் குடுத்தினர்க்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---


**ஜகன்மோகினி காரியாலயம்,**
26. தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை—5.

**வை. மு. கோ. நாவல்கள்**

4—8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மல நீரோடை
ரூ. 2—8
அமுதமொழி (கினேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 2—4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி (சாதா)
தெய்விக ஒளி
ஜீவநாடி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று

ரூ. 1—12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1—8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
ரூ. 1—4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1—2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா. 12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
அணா 8.
உணர்த்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி

ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

**வை. மு. ஸ்ரீ.**
உதய சூரியன் 1—4
பெண்மணிக்கனல் 1—0
இருளில் ஒளி 1—4
தியாகபலி 0—12
ஜயந்திசிந்தனைகள் 1—8

**வை. மு. பத்மினி**
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1—0

**சுத்தானந்த பாரதி**
காந்தி கீர்த்தனம் 3-8

**ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமீ**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம் 1·0
அபூர்வ ராமாயணம்

*




*

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.